இன்றைய செய்தி நாளைய வரலாறு
கலைஞர் 100 1924 - 2023
# முரசொலி
Murasoli
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com
தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 8 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 32 – வியாழக்கிழமை 17 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 8 : Thiruvalluvar Year - 2054 - Aadi 32 - Thursday 17 August 2023 - Kovai ★★ 12+8 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சுதந்திரத் திருநாள் சிறப்புரையாற்றினார்.

## ஒற்றுமையால் கிடைத்த விடுதலையை அதே ஒற்றுமையால் காப்போம்!

# வேற்றுமையை விதைக்கும் சக்திகளை வேரோடு சாய்ப்போம்!

### தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஆக.17 –**

**சென்னை – தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் 77வது விடுதலை நாளையொட்டி, தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “ஒற்றுமையால் கிடைத்த விடுதலையை அதே ஒற்றுமையால் காப்போம்” என்றும் “வேற்றுமையை விதைக்கும் சக்திகளை வேரோடு சாய்ப்போம்!” என்றும் சூளுரை விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் விழாப் பேருரை வருமாறு: –

சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நீதி அரசர்களே, தமிழ்நாடு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே,

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே,

காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகளே,

சிறப்பு விருந்தினர்களே,

விடுதலைப் போராட்ட தியாகிகளே,

அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களே,

பல்வேறு விருதுகளை பெறுவதற்காக வருகை தந்திருக்கக்கூடிய பெரியோர்களே, தாய்மார்களே,

என் கண்ணின் மணிகளான மாணவச் செல்வங்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

பட்டொளி வீசிப் பறக்கும் மூவண்ணக் கொடிக்கு முதல் வணக்கம்! அதன் நிழலில் வாழ்கின்ற நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்வணக்கம்!

**கலைஞர் நூற்றாண்டில் கொடி ஏற்றும் வாய்ப்பு!**

77வது ஆண்டினைத் தொடங்கியுள்ளது இந்திய ஒன்றியத்தின் விடுதலை நாள். இந்திய ஒன்றியத்தின் முக்கியமான அங்கம் நம் தமிழ்நாடு.

மூத்த மொழியாம் செம்மொழித் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நம் தமிழ்நாடு, இடைக்காலத்தில் சென்னை மாகாணம், மெட்ராஸ் பிரசிடென்சி, மதராஸ் மாகாணம், மெட்ராஸ் என்று அழைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்த பிறகு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தமிழ் மண்ணின் முதலமைச்சராக ஆன பிறகுதான், 1967ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டப்பட்டது.

‘ஒரே ஒரு சங்கரலிங்கனார்தான் செத்துப் போயிருக்கிறார் என்று நினைப்பீர்களேயானால் தமிழ்நாடு என்ற ஒவ்வொரு எழுத்துக்கும் சேர்த்து ஐந்து உயிர்களைத் தரத் தயாராக இருக்கிறோம்’ என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் குரல் கொடுத்தவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்!

‘சென்னை மாகாணத்தில் இருந்த பிற மொழி பேசும் எல்லா மாநிலங்களும் தனித் தனியாகப் பிரிந்து போனபிறகு தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டாமல் ஏன் இருக்க வேண்டும்? அதனைப் பார்த்துக் கொண்டு நான் ஏன் உயிரோடு இருக்க வேண்டும்?’ என்று கேட்டவர் தந்தை பெரியார்.

இத்தகைய பார்போற்றும் தமிழ்நாடு மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், மூன்றாவது ஆண்டாக இந்திய நாட்டின் தேசியக் கொடியை ஏற்றி வைக்கிறேன். 400 ஆண்டுகள் பழமையான இந்த புனித ஜார்ஜ் கோட்டையின் கொத்தளத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இந்தக் கொடியேற்றும் வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்!

### விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்ப உறுப்பினர்களின் ஓய்வூதியம் ரூ.11 ஆயிரமாக உயர்வு!

**விடுதலை வீரர்களை கழக அரசு போற்றுவதில் யாருக்கும் சளைத்தது அல்ல!**

நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியாம் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டில் கோட்டையில் நின்று கொடியேற்றும் வாய்ப்பை நான் பெற்றமைக்காகப் பெருமை அடைகிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தின் முதலமைச்சர்கள் அனைவருக்கும் விடுதலை நாளன்று கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்து, மாநில சுயாட்சிக் கொடியைக் காத்த தலைவர்தான் கலைஞர் அவர்கள். அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது என்பது தமிழை, தமிழ்நாட்டைக் கொண்டாடுவதாகும்.

விடுதலை வீரர்களைப் போற்றிப் பாராட்டுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு யாருக்கும் சளைத்தது அல்ல. அதற்கு சில எடுத்துக்காட்டுகளை இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

- மாவீரன் பூலித்தேவனுக்கு, நினைவு மண்டபம்!
- பாஞ்சாலங்குறிச்சியில், வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கோட்டை!
- மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு!
- மகாகவி பாரதியின் வீடு, அரசு இல்லம் ஆனது!
- பெருந்தலைவர் காமராசருக்கு, மணிமண்டபம்!
- மூதறிஞர் இராஜாஜிக்கு, நினைவாலயம்!
- தில்லையாடி வள்ளியம்மாளுக்கு, மணிமண்டபம்!
- வீரவாஞ்சியின் உறவினருக்கு, நிதி!
- வ.உ.சி. இழுத்த செக்கு, நினைவுச் சின்னம் ஆனது!
- விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, இலவசப் பேருந்து பயணம்!
- தியாகிகளுக்கு, மணிமண்டபம்!
- விடுதலைப் பொன்விழா நினைவுச் சின்னம்!
- விடுதலைப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்கு நினைவு மண்டபம்
- தியாகி ஈஸ்வரன் அவர்களுக்கு அரங்கம்
- தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு!
- நேதாஜி சுபாஷ் சந்திர போஸுக்குச் சிலை!
- தியாகி கக்கனுக்குச் சிலை!
- சிப்பாய் கலகத்துக்கு நினைவுத் தூண்!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் சுதந்திரத் திருநாளையொட்டி நடைபெற்ற காவல்துறையின் அணிவகுப்பினை பார்வையிட்டார்.

## “தகைசால் தமிழர்”


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு ‘தகைசால் தமிழர்’ விருதுடன், 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழை வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 17-08-2023

# பலி வாங்கும் ‘நீட்’ 1

‘நீட்’ தேர்வு கொடுமைக்கு எதிராக அரியலூர் அனிதா தொடங்கி இது வரை பலியான உயிர்கள் எத்தனை?

- **அரியலூர் அனிதா**
- **செஞ்சி பெரவள்ளூர் பிரதிபா**
- **திருச்சி சுபஸ்ரீ**
- **சேலையூர் ஏஞ்சலின் சுருதி**
- **திருப்பூர் ரிதுஸ்ரீ**
- **கூனிமேடு மோனிஷா**
- **பட்டுக்கோட்டை வைஸ்யா**
- **நெல்லை தனலட்சுமி**
- **கோவை சுபஸ்ரீ**
- **செந்துறை விக்னேஷ்**
- **தருமபுரி ஆதித்யா**
- **திருச்செங்கோடு மோதிலால்**
- **கரூர் பிரீத்தாஸ்ரீ**
- **அரியலூர் நிஷாந்தி**
- **மேட்டூர் தனுஷ்**
- **துவரங்குறிச்சி கனிமொழி**
- **மதுரை ஜோதிகாஸ்ரீ**
- **காட்பாடி சௌந்தர்யா**

இவை அனைத்தும் நீட் தேர்வு கொடுமை தாங்க முடியாமல் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டவர்கள். இந்தப் பட்டியலுக்கு இன்றும் ‘முற்றும்’ விழவில்லை.

சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் என்ற மாணவன் இரண்டு நாட்களுக்கு முன் தற்கொலை செய்து கொண்டார். மகன் இறந்த சோகம் தாங்காமல் அவரது அப்பா செல்வசேகர் மறுநாள் தற்கொலை செய்து கொண்டார். இரண்டு முறை தேர்வு எழுதி, தோற்ற மாணவர் அவர்.

**“நான் நீட் தேர்வில் 160 மார்க்தான் எடுத்தேன்.. அதனால் மெரிட்டில் அரசு மருத்துவக் கல்லூரியில் சீட் கிடைக்கவில்லை. ஆனால் எங்கப்பா ரூ.25 லட்சம் கட்டியதால் எனக்கு மேனேஜ்மெண்ட் கோட்டாவில் டாக்டர் சீட் கிடைச்சு இருக்கிறது... ஆனால் என்னைவிட நல்லா படிச்சும் ஜெகதீஸ்க்கு டாக்டராகும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அவன் 400 மார்க் எடுத்தான். ஆனாலும் அவன் அப்பாவிடம் பணம் இல்லாததால் அவனுக்கு டாக்டர் சீட் கிடைக்கவில்லை. அதனால் அவன் செத்துட்டான். அவனது அப்பாவும் தற்கொலை செஞ்சுக்கிட்டார். பணம் காசுன்னாலதான் இந்த டாக்டர் சீட் என்றால் இந்த நீட் தேர்வை வச்சி இன்னும் என்ன சாதிக்கப் போறீங்க. யாருக்காக இந்த நீட் தேர்வு? இந்த நீட் தேர்வை நடத்தி சென்ட்ரல் கவர் மெண்ட் இன்னும் எத்தனை பசங்களை, குடும்பங்களை சாவடிக்க போறாங்க? பணம் இல்லாததால் நல்ல படிச்சும் 400 மார்க் எடுத்தும் என் நண்பன் ஜெகதீசினால் டாக்டராக முடியவில்லை. தற்கொலை பண்ணிக்கிட் டான். ஆனால் 160 மார்க் எடுத்த நான், பணம் இருப்பதால் மட்டுமே டாக்டர் ஆக போகிறேன்.. நான் எப்படி நல்ல மருத்துவராக முடியும்..?” என்று கேட்கும் மாணவன் பெயர் ஃபயாசுதீன். நீட் தேர்வால் தற்கொலை செய்து கொண்ட மாணவர் ஜெகதீஸ்வரனின் நண்பர்!**

தமிழ்நாட்டில் இருக்கிறாரே ஒரு ஆளுநர் ஆர்.என்.ரவி என்பவர். தன்னை ஏதோ மன்னரைப் போல நினைத்துக் கொள்கிறாரே அவர்தான் இந்தச் சோகங்கள் தொடர்வதற்கு முக்கியக் காரணம் என்றால் யாரால் மறுக்க முடியும்?

தனியார் பயிற்சி மையம் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் பங்கெடுத்தார் ஆளுநர் ரவி. அப்போது, **“பள்ளிக்கூடங்களில் சொல்லித் தரப்படும் பாடங்களின் அடிப்படையில், நீட் தேர்வில் மாணவர்கள் தேர்ச்சிப் பெறவே இல்லை. அதன் பின்னணியில் ஒரு சதி இருக்கிறது. நீட் தேர்வுக்குப் பின்னால், ஒவ்வொரு பள்ளியும், தனியார் நிறுவனங்களுடன் இணைந்துதான் நீட் தேர்வுக்கும் மாணவர்களை தயார் செய்து வருகின்றனர்”** என்று சேலத்தைச் சேர்ந்த ஒரு மாணவியின் தந்தை பொங்கிவிட்டார்.

**“தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் நீட் தேர்வில் வெற்றி பெறுகின்றனர். நிறைய மதிப்பெண்களும் பெற்றுள்ளனர். இருப்பினும், தமிழக மாணவர்களுக்கு நீட் தேர்வில் இருந்து விலக்களிக்க வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறோம். எனவே, தமிழக அரசின் நீட் தேர்வு விலக்கு மசோதாவுக்கு எப்போது விலக்கு அளிப்பீர்கள்?”**

- என்று கேள்வி எழுப்பினார் அவர். இதனை ஆளுநரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உடனே தன்னை ஏதோ குடியரசுத் தலைவரைப் போல நினைத்துக் கொண்டுவிட்டார் ஆளுநர்.

“நீட் தேர்வுக்கு தடை கோருவதை ஒருபோதும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் அளித்து கையெழுத்திடமாட்டேன். இந்த விவகாரம் பொதுப் பட்டியலில் இருப்பதால், குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வைப் பொறுத்தவரை, பயிற்சி மையங்களுக்குச் சென்றுதான், அதில் வெற்றிபெற வேண்டும் என்ற எந்த அவசியமும் இல்லை” என்று சொல்லி இருக்கிறார் ரவி.

**பயிற்சி மையங்களுக்கு ஆளுநர் வக்காலத்து வாங்குவது ஏன்? பல லட்சம் பணம் வாங்கும் ஒரு பயிற்சி மையம்தான் மாணவர்களை அழைத்து வந்திருந்தது. அவர்களுக்கு ஏற்ப பயிற்சி மையங்களின் பிராண்ட் அம்பாசிட்டராக ஆளுநர் மாறினார். பயிற்சி மையங்கள் எவ்வளவு வசூல் செய்கின்றன என்பதாவது ஆளுநருக்குத் தெரியுமா?**

**பயிற்சி மையங்கள் பிழைக்கவே நீட் தேர்வுகள்.**

**அதுவே மாணவர்களை பலி வாங்கும் மையங்களாக இருக்கின்றன என்பது ஆளுநருக்குத் தெரியுமா?**

*தொடரும்*





கழகத்திற்கு வலுச்சேர்க்க கொள்கைமிகு இளைஞர்களை வளர்த்தெடுத்து வரும் தி.மு.க. இளைஞர் அணியின் மண்டலம் 1க்கு உட்பட்ட சென்னை கிழக்கு – மேற்கு – வடக்கு ஆகிய மாவட்டங்களுக்கான பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களைத் தேர்வு செய்வதற்கான நேர்காணலை கழக இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சென்னை அன்பத்தில் நடத்தினார். அப்போது கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் உடனிருந்தனர்.

## முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

# தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

### இராமநாதபுரத்தில் இன்று நடைபெறுகிறது! கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 17-**

**முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றும் தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம் இராமநாதபுரத்தில் இன்று (ஆகஸ்ட் 17) நடைபெறுகின்றது என்று கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிவித்துள்ளார்.**



இதுகுறித்து கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22.3.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல்” உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மேற்கண்ட தீர்மானங்களின் படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப் பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச் சாவடி பொறுப்பாளர்களுக் கென “வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம்” நடத்திட முடிவெடுக்கப்பட்டு, முதலாவதாக கடந்த ஜூலை 26 அன்று திருச்சியில் டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து;

தென் மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் “வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்” இன்று (17.8.2023 - வியாழக்கிழமை) இராமநாதபுரம், தேவிப்பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரை யாற்றிட நடைபெற உள்ளது.

தென் மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 19 கழக மாவட்டங்களின், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தத்தமது மாவட்டங்களுக்குட்பட்ட ‘வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) கூட்டத்தை’ கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

1. இராமநாதபுரம், 2. சிவகங்கை, 3. திண்டுக்கல் கிழக்கு, 4. திண்டுக்கல் மேற்கு, 5. தேனி வடக்கு, 6. தேனி தெற்கு, 7. மதுரை மாநகர், 8. மதுரை வடக்கு, 9. மதுரை தெற்கு, 10. விருதுநகர் வடக்கு, 11. விருதுநகர் தெற்கு, 12. திருநெல்வேலி கிழக்கு, 13. திருநெல்வேலி மத்திய, 14. தென்காசி வடக்கு, 15. தென்காசி தெற்கு, 16. தூத்துக்குடி வடக்கு, 17. தூத்துக்குடி தெற்கு, 18. கன்னியாகுமரி கிழக்கு, 19. கன்னியாகுமரி மேற்கு,

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிவித்துள்ளார்.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் சமத்துவ விருந்து!

### அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

*சென்னை, ஆக.17-*

*சுதந்திர தினத்தை முன்னிட்டு, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற சமத்துவ விருந்து நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள் உதயநிதி ஸ்டாலின் மற்றும் பி.கே. சேகர்பாபு ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.*

*இந்திய திருநாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்து சமய அறநிலைத்துறை சார்பில் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப் பட்டன. சென்னையிலுள்ள முக்கிய திருக்கோயில்களில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சிகளில் சட்டப்பேரவை தலைவர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.*

*சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நேற்று முன்தினம் (15.08.2023) நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு பொதுமக்களோடு அமர்ந்து உணவு அருந்தினர். அதனைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகளை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் என்.சிற்றரசு, மாநகராட்சி மண்டல குழு தலைவர் எஸ்.மதன் மோகன், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, திருக்கோயில் செயல் அலுவலர் /துணை ஆணையர் திருமதி எஸ்.நித்யா உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.*



சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள தனது முகாம் அலுவலகத்தில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நாட்டின் 77 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய கொடி ஏற்றி மரியாதை செலுத்தினார்.

## கழக இலக்கிய அணிப் புரவலர் தஞ்சை கூத்தரசன் தொடங்கி வைக்க

# மாம்பலம் ஆ.சந்திரசேகர் “கலைஞர் நூறு” எனும் தலைப்பில் சிறப்புரை!

### இன்று சென்னை பெரியார் திடலில் நிகழ்ச்சி நடைபெறுகிறது!

*சென்னை, ஆக. 17-*

*இதுகுறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் திருமதி.ஆ.வீரமர்த்தினி தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-*

*உலகளாவிய வகையில் தலைசிறந்த பகுத்தறிவு ஞானி தஞ்சை பெரியாரின் அறிவுப் பாசறை திராவிடர் கழகத்தின் சேய் அமைப்பான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் இன்று (17.8.2023 - வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை, தந்தை பெரியார் திடலிலுள்ள அன்னை திருமதி. ஈ.வெ.ரா. மணியம்மையார் அரங்கில் என் (ஆ.வீரமர்த்தினி) தலைமையில் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.*

*தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் புரவலர். தஞ்சை கூத்தரசன் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகிறார். தென்மேற்கு மாவட்டத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் “கலைஞர் நூறு” எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுகிறார். பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், தென் மாறன், வழக்கறிஞர் மணியம்மை ஜெனார்த்தனம் மற்றும் ஆவடி பாஸ்கர், பேராசிரியர் தனராசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*எனவே இந்நிகழ்வுக்கு அனைவரும் அணி திரண்டு வரவேண்டுமென அன்புடன் வேண்டுகிறேன்.*

*இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.*

# ஓலா, ஊபர், ஸ்விகி, ஸொமட்டோ வாகனப் பணியாளர்களுக்கு நல வாரியம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளைப் போற்றிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். மொழிப்பற்று, இனப்பற்றுடன் நாட்டுப்பற்றையும் ரத்த உணர்வாகக் கொண்டவர்கள் நாம்.

• 1962ஆம் ஆண்டு சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை எதிர்கொள்வதில் பண்டித நேரு அவர்களுக்குத் துணை நின்றார்கள்.

• 1971ஆம் ஆண்டு இந்தியாவை பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, இந்திய மாநிலங்கள் எல்லாம் 25 கோடி ரூபாய் நிதி திரட்டி, இந்திய பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களிடம் அளித்தபோது, அதில் தமிழ்நாட்டின் பங்காக ஆறு கோடி ரூபாய் அளித்தது தலைவர் கலைஞரின் அரசு.

• 1999ஆம் ஆண்டு கார்கில் போரின்போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணையாக மொத்தம் 50 கோடி ரூபாயை வழங்கினார் முதலமைச்சர் கலைஞர்.

**தியாகிகளை மதிக்கும்**
**திராவிட மாடல் அரசு!**

திராவிட மாடல் அரசும், நம் நாட்டுத் தியாகிகளை மதித்துப் போற்றி வருகிறது.

• இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டு விழாவைப் பெருவிழாவாக ஆண்டு முழுவதும் கொண்டாடினோம். அதற்கான நினைவுத்தூண் நேப்பியர் பாலம் அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

• பாரதியார் நினைவு நாளான செப்டம்பர் 11 ஆம் நாளை 'மகாகவி நாள்' என அறிவித்தோம்.

• அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்பினைச் செய்தோம்.

• செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரைப் பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை வெளியிட்டோம்.

• அவரது படைப்புகளைத் தொகுத்துப் பாடநூல் கழகத்தின் சார்பில் வெளியிட்டுள்ளோம்.

• அதுமட்டுமல்ல, அவர் பிறந்த தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிக்குளத்தில் இயங்கிவரும் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வ.உ.சிதம்பரனார் அவர்களது பெயர் சூட்டப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். இந்த வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, இந்த ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் பனை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்க தலா 15 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டதையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

• உத்தரப் பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீடு சீரமைக்கப்பட்டது.

• கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது.

• கிண்டியில் மருது சகோதரர்கள் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

• விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி, ஒளிக் காட்சிகள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

• காந்தி மண்டபம், அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராசர் மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் மண்டபம் ஆகியவை மேம்படுத்தப்பட்டுள்ளது.

• தனது வாழ்நாளில் 20 முறை தமிழ்நாட்டுக்கு வந்தவர் அண்ணல் காந்தியடிகள் அவர்கள். அரையாடை அணிவது என்ற முடிவை மதுரை மண்ணில் இருந்துதான் காந்தியடிகள் எடுத்தார்கள். இதன் அடையாளமாகச் சென்னை அருங்காட்சியக வளாகத்தில் காந்தியடிகளின் திருவுருவச் சிலையை அமைத்துள்ளோம். அதனை நான் திறந்து வைத்தேன்.

**சொன்னதைச் செய்ததோடு**
**சொல்லாமலேயும் செய்யும் அரசு!**

சொன்னதைச் செய்வதும், சொல்லாமலே செய்வதும் நம்முடைய அரசின் செயல்பாடாக அமைந்துள்ளது.

• இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் 195 பேருக்கு மாதம்தோறும் தியாகிகளுக்கான நிதிக் கொடையை தொடர்ந்து வழங்கி வருகிறது தமிழ்நாடு அரசு.

• கடந்த ஆண்டு தியாகிகளுக்கான ஓய்வூதியம் 18 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரம் ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியம் 9 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

• அதேபோல் விடுதலைப் போராட்ட வீரர்களின் வழித்தோன்றல்களுக்கு தொடர்ந்து உதவிகளை செய்து வருகிறது நமது அரசு.

• விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் பத்தாயிரம் ரூபாயிலிருந்து, 11 ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும் என்ற புதிய அறிவிப்பை இன்று வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடுதான் விடுதலைப் போராட்டத்துக்கான விதையை முதலில் விதைத்தது. விடுதலை தாகத்தில், விடுதலை வேகத்தில், நாட்டுப்பற்றில் நம் தமிழ் இனம் இந்தியாவில் உள்ள எந்த இனத்திற்கும் எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல.

1600ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி இங்கு காலூன்றியது என்று சொன்னால், அவர்களது அடக்குமுறைக்கு எதிராக உடனடியாக விடுதலை முழக்கத்தை எழுப்பிய மண் தமிழ்நாடு. 1857 சிப்பாய்க் கலகத்தைத்தான் முதலாவது இந்திய விடுதலைப் போர் என்று சிலர் சொல்கிறார்கள். அதற்கு முன்னால் 1755ஆம் ஆண்டு தெற்கில் அதுவும் தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் தொடங்கிவிட்டது.

**விடுதலை முழக்கத்தை**
**எழுப்பிய தமிழ்மண்!**

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் நின்று கொடியை ஏற்றும்போது தமிழனாகப் பெருமைப்படும், உணர்ச்சி வசப்படும் நிலை ஏற்படுவதற்கு இதுதான் காரணம். அடிமைப்படுத்துதல் என்று தொடங்கியதோ, அன்றைய தினமே விடுதலை முழக்கத்தை எழுப்பிய மண் நம்முடைய தமிழ் மண்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் ஆங்கிலேயே ஆதிக்கத்திலிருந்து நம் நாடு விடுதலை பெற்று, சுதந்திரக் கொடி பறந்தது. ஆனால், அதற்குப் பல ஆண்டுகள் முன்பே, ஆடுவோமே.. பள்ளுப் பாடுவோமே.. ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே என்று தொலை நோக்குடன் பாடியவர் தமிழ்நாடு தந்த மகாகவி பாரதியார்.

ஆங்கிலேயரிடமிருந்து நாம் விடுதலை பெற வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், உத்தமர் காந்தியடிகளின் வழிகாட்டுதலில்,

1930ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை விடுதலை நாளாகக் கொண்டாட வேண்டும், மூவண்ணக் கொடியை ஏற்ற வேண்டும் என நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள். நாட்டின் பல இடங்களிலும் மூவண்ணக் கொடியை மக்கள் ஏற்றினார்கள்.

## கிள்ளி குளம் அரசு வேளாண்மைக் கல்லூரிக்கு வ.உ.சிதம்பரனார் பெயர் சூட்டப்படும்!

அந்த நாளின் பொழுது விடிவதற்கு முன்பாக நள்ளிரவில், இதோ இந்த சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள உயரமான கொடி மரத்தின் மீது ஓர் இளைஞன் ஏறினான். ஆங்கிலேயக் காவலர்கள் தன்னைப் பார்த்து விடக்கூடாது என கவனமாக ஏறினான். அப்போது உயர் நீதிமன்றம் அருகே கலங்கரை விளக்கம் இருந்தது. அதன் ஒளி தன் மீது பட்டு, அடையாளம் காட்டிவிடக்கூடாது என்பதால், எத்தனை மணித்துளிகளுக்கு ஒரு முறை கொடிக்கம்பத்தின் மீது அந்த ஒளி படுகிறது என்பதைக் கணக்கிட்டு, அந்த வெளிச்சம் வரும்போது எல்லாம், கொடிமரத்தின் மறுபுறத்தில் தன்னை மறைத்துக் கொண்டு, கவனமாக ஏறி, உயரத்தில் பறந்த பிரிட்டிஷாரின் யூனியன் ஜாக் கொடியை அகற்றிவிட்டு, மூவண்ணக் கொடியை பறக்கவிட்டான் அந்த இளைஞன். அந்த வீர இளைஞரின் பெயர் பாஷ்யம் என்கிற ஆர்யா.

**தியாக வரலாறு கொண்ட**
**உயர்ந்தக் கொடி கம்பம்!**

காலையில் கண்விழித்து பார்த்த வெள்ளைக்கார அதிகாரிகள், தங்கள் கொடிக்கு பதில் மூவண்ணக் கொடி பறப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். சென்னை மக்களோ மகிழ்ச்சி அடைந்தனர். இந்தக் கொடிக் கம்பத்திற்கும் அதில் பறக்கின்ற கொடிக்கும் தியாக வரலாறு உண்டு.

இந்தக் கொடி இந்திய நாட்டைக் காத்த கொடி மட்டுமல்ல, காக்கும் கொடி! காக்கப் போகும் கொடி! இது வெறும் கொடியல்ல, கோடானு கோடி இந்திய மக்களின் மணிமுடி! இந்தியாவின் விடியலுக்கு வித்திட்ட இந்த மூவண்ணக் கொடிதான், எதிர்கால இந்தியாவை உருவாக்கவும், உணர்ச்சியையும், எழுச்சியையும் ஊட்டி வரும் கொடியாகும்.

பரந்து விரிந்த இந்திய நாட்டில் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கிறார்கள். பல்வேறு மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். பல்வேறு வழிபாட்டு நம்பிக்கை கொண்டவர்கள் வாழ்கிறார்கள். மாநிலத்திற்கு மாநிலம் உடை மாறுபடுகிறது. மாநிலத்திற்கு மாநிலம் உணவு மாறுபடுகிறது. மாநிலத்திற்கு மாநிலம் உணர்வும், உணர்ச்சியும் மாறுபடுகின்றன. பண்பாடும், பழக்க வழக்கங்களும் மாறுபடுகின்றன. இவ்வளவு வேற்றுமை இருந்தாலும் அந்த வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக வாழ்கிறோம். ஒரு குடையின் கீழ் வாழ்கிறோம் என்பார்களே, அதே போல ஒரு கொடியின் கீழ் நாம் வாழ்கிறோம். அதுதான் இந்த மூவண்ணக் கொடி.

மூவண்ணக் கொடியை போற்றுவதன் மூலமாக நாட்டை போற்றுகிறோம், நாட்டு மக்களை வணங்குகிறோம். மூவண்ணக் கொடிக்கு முன்பு, அணி அணியாக அணிவகுத்து நிற்கும் நாட்டு மக்கள் அனைவர்க்கும் எனது அன்பான வணக்கங்கள்!

நாம் அனைவரும் இன்று விடுதலைக் காற்றைச் சுவாசிக்கக் காரணமாக அமைந்த வீரத்தியாகிகள் அனைவருக்கும் வீரவணக்கத்தைச் செலுத்துவோம்! அத்தகைய தியாகிகளை ஈந்த அவர்தம் குடும்பத்தினர் வாழும் திசை நோக்கி வணங்குவோம்!

இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய பெருமக்கள் அனைவரும் விடுதலை பெற்ற இந்திய நாடு எப்படி இருக்க வேண்டும்? இது யாருக்கான இந்தியாவாக அமைய வேண்டும் என்பதைக் கனவு கண்டார்கள்.

ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியாவே விடுதலை பெற்ற மகிழ்ச்சியில் இருந்த போது, விடுதலைப் போராட்டத்துக்கு தலைமை வகித்த மகாத்மா காந்தி அவர்கள் தலைநகர் டெல்லியில் இருக்காமல், மதவெறிக் கலவரங்கள் நடந்த நவகாளிப் பகுதியில் இருந்தார். அதுவும் பாதுகாப்பான இடத்தில் இருக்காமல் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் போய் தங்கி இருந்தார். தனது அறச்சிந்தனையால், நல்ல உள்ளத்தால் கலவரத்தைக் கட்டுப்படுத்தினார் மகாத்மா காந்தி.

**"ஒற்றை வீரராய்**
**கலவரத்தை கட்டுப்படுத்தியவர்"**

"பஞ்சாப்பில் 55 ஆயிரம் வீரர்கள் இருந்தாலும், கலவரங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் வங்காளத்தில் ஒற்றை வீரராக இருந்து கலவரத்தைக் கட்டுப்படுத்தி விட்டீர்கள்" என்று அண்ணல் காந்திக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார் அன்றைய கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன்.

கல்கத்தாவை அமைதிப்படுத்திய அண்ணல் காந்தி, அடுத்து டெல்லிக்கு வந்தார். அதே அமைதியை உருவாக்கினார். மதங்களின் பெயரால் மனமாச்சரியங்களின் பெயரால் மக்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டால் அந்த இடத்துக்குச் சென்று அமைதிப்படுத்துவதே தனது முக்கியமான பணி என்று கருதினார் காந்தி.

"பரம ஏழைகளாக இருப்பவர்கள் இது எனது நாடு என்று என்றைக்கு நினைக்கிறார்களோ, எதனுடைய உருவாக்கங்களில் அவர்களது குரல் ஓங்கியிருக்கிறதோ, எந்த ஒரு இந்தியாவில் உயர் வகுப்பினர், தாழ்த்தப் பட்டவர் என மக்களுக்குள் வேறுபாடு இருக்காதோ, எந்த ஒரு நாட்டில் எல்லா வகுப்பினரும் நல்லிணக்கத்துடன் வாழ்வார்களோ, அதுதான் உண்மையான இந்தியா" என்று சொன்னார் அண்ணல் காந்தியடிகள்.

25 வயதில் தூக்கு மேடைக்கு சிரித்துக் கொண்டே சென்ற மாவீரன் பகத்சிங் சொன்னார்... "பாலுக்கு அழும் குழந்தை, கல்விக்கு ஏங்கும் மாணவன், வேலை தேடும் இளைஞன்... இவைகள் இல்லாத இந்தியாவே விடுதலை இந்தியா" என்றார் பகத்சிங்.

## முன்னாள் இராணுவத்தினர் 10 ஆயிரம் பேருக்குப் பணி!

பிரிட்டிஷ் ஆட்சிக்கு இறுதிக்காலத்தில் சிம்மசொப்பனமாக இருந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். அவர் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவம்தான், இனி அதிக காலம் இந்தியாவை ஆட்சி செய்ய முடியாது என்ற எண்ணத்தை பிரிட்டிஷாருக்கு உருவாக்கியது. "இரத்தத்தைத் தாருங்கள் விடுதலையை வாங்கித் தருகிறேன்" என்று சொல்லி இந்தியன் நேஷனல் ஆர்மியை உருவாக்கியவர் நேதாஜி அவர்கள். "இந்தியாவின் பயணம் என்பது சோசலிசத் திசைவழியில் செல்ல வேண்டும்" என்றார் நேதாஜி.

விடுதலை இந்தியாவுக்கான அரசியலமைப்புச் சட்டத்தை வடித்துக் கொடுத்த புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களும், அனைவருக்கும் பொதுவான இந்தியாவைத்தான் விரும்பினார்.

"வகுப்புகளுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வையும், பாலினங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வையும் அப்படியே விட்டுவிட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்த சட்டங்களை உருவாக்கிக் கொண்டே செல்வது என்பது, நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தைக் கேலிக்கூத்தாக்கிவிடும். இது சாணக்குவியலுக்கு மேலே மாளிகையைக் கட்டுவதைப் போன்று ஆகிவிடும்" என்று சொன்னவர் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள்.

**கூட்டுறவு சமதர்மம் உருவாக**
**வலியுறுத்திய தந்தை பெரியார்!**

இதனைத்தான் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும் வலியுறுத்தினார்கள். "மனித சமூகத்தில் சுயமரியாதை உணர்ச்சியும், சகோதரத்துவமும் தோன்ற வேண்டும். ஒருவன் உயர்ந்தவன் ஒருவன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் அகல வேண்டும். உலகுயிர் அனைத்தும் ஒன்றெனும் எண்ணம் உதிக்க வேண்டும். வகுப்புச் சண்டைகள் மறைய வேண்டும். அனைவருக்கும் அனைத்தும் பொதுவான கூட்டுறவுச் சமதர்மம் உருவாக வேண்டும்" என்பதையே தனது இலக்காகச் சொன்னார் தந்தை பெரியார் அவர்கள்.

> **மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தின் முதலமைச்சர்கள் அனைவருக்கும் விடுதலை நாளன்று கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்து, மாநில சுயாட்சியைக் காத்த தலைவர்தான் கலைஞர் அவர்கள். அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது என்பது தமிழை, தமிழ்நாட்டைக் கொண்டாடுவதாகும்.**

இவர்கள் அனைவரும் விரும்பியது சமத்துவ சகோதரத்துவ சமதர்ம இந்தியா. இந்தியா என்பது எல்லைகளால் அல்ல, எண்ணங்களால் வடிவமைக்கப்பட வேண்டும். அத்தகைய ஒரு அரசைத்தான் நாங்கள் தமிழ்நாட்டில் நடத்தி வருகிறோம். சமூகநீதி சமத்துவம் சுயமரியாதை மொழிப்பற்று இன உரிமை மாநில சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடித்தளத்தில் நிற்கும் இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்த அடிப்படையில்தான் நமது ஆட்சியும் அமைந்துள்ளது.

கடந்த இரண்டாண்டு காலத்தில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை நீங்கள் பார்த்தால் ஒரே யொரு துறை வளர்ச்சியாக இல்லாமல் பல்துறை வளர்ச்சியாக அமைந்திருக்கும்.

**அண்ணா பிறந்த நாளில்**
**கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்!**

அதனடிப்படையில்தான், காலம் காலமாக குடும்ப பாரத்தை சுமக்கின்ற பெண்கள், தங்கள் உழைப்பிற்கு எந்த மதிப்பும் இன்றி, இதுதான் தங்களுக்கு விதிக்கப்பட்டது என்று எண்ணியிருந்த நிலையை மாற்றிடும் வகையிலும், ஆணுக்கு இணையாகப் பெண்களுக்கும் உரிமை உண்டு என்பதை உணர்ந்து கொள்ளும் வகையில் மகத்தானத் திட்டத்தை அறிமுகப்படுத்த இருக்கிறோம்.

• ஏறத்தாழ ஒரு கோடி மகளிர் மாதம்தோறும் பயனடையும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அடுத்த மாதம் 15ஆம் நாள் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளன்று தொடங்கப்பட இருக்கிறது.

இந்தச் சமூகத்திற்காக வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரமாக இதனை வழங்க இருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ் மகளிர்க்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட உள்ளது.

'ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அந்நாட்டில் உள்ள பெண்களது முன்னேற்றத்தைக் கொண்டே அளவிடுவேன்' என்று சொன்ன அண்ணல் அம்பேத்கரின் வழியில், பெண்களின் உயர்கல்வியை உறுதிசெய்ய கொண்டு வரப்பட்ட புதுமைப்பெண் திட்டத்தில், அரசுப் பள்ளியில் பயின்று, கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் என்று, கடந்த நிதி ஆண்டில் மட்டும் சுமார் 2 இலட்சம் இளம்பெண்களுக்கு 100 கோடி ரூபாய் உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் சுமார் 2 லட்சத்து 11 ஆயிரம் உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு, சுமார் 350 கோடி ரூபாய் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்படுவதால், பெண்கள் பெறுகின்ற கல்வி மூலம், அவர்களின் இல்லத்தில் புதிய ஒளி பரவுவதையும், அந்த ஒளி மாணவியின் பெற்றோரின் முகத்தில், சகோதர சகோதரிகளின் முகத்தில் பரவி, புன்னகையைப் பூக்கச் செய்வதையும் கண்டு நான் உள்ளம் நெகிழ்கிறேன்.

• 2021ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் நாள் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டு கோட்டைக்கு வந்தபோது போட்ட முதல் கையெழுத்து என்பது மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி செய்து தரும் உத்தரவுதான்.

திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை பெற்ற செய்தி வந்து கொண்டிருக்கும் போது, அதிகாரிகள் என்னை வந்து சந்தித்தார்கள். அப்போது, மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதியை செய்து தருவதுதான் என் முதல் பணியாகக் கருதுகிறேன், முதல் கையெழுத்து அதற்குத்தான் போடப் போகிறேன் என்று சொன்னேன்.

"ஏற்கனவே போக்குவரத்துத் துறை மிகுந்த நஷ்டத்தில் இருக்கிறது. அந்த நிலையில் மகளிருக்குக் கட்டணமில்லை என்று சொன்னால் இழப்பு அதிகமாகிவிடும்" என்று சில அதிகாரிகள் சொன்னார்கள்.

"விடியல் தரப்போகிறோம்" என்று சொல்லி ஆட்சிக்கு வந்தோம் விடியல் வந்துவிட்டது என்பதன் அடையாளமாக மகளிருக்குக் கட்டணமில்லை என்பதை அறிவித்தாக வேண்டும் என்று நான் சொன்னேன்.

**மகளிர் பொருளாதாரச் சுமையை**
**குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை!**

பல்வேறு தரப்பு மகளிரின் பொருளாதாரச் சுமையை குறைக்கும் வகையில், பேருந்துகளில், அவர்கள் கட்டணம் செலுத்தாமல் பயணிக்கக் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் தினசரி 50 இலட்சம் மகளிர் பயணிக்கின்றனர். இதுவரை இந்தத் திட்டத்தில் சுமார் 314 கோடி முறை பெண்கள் அரசுப் பேருந்துகளில் பாதுகாப்பான பயணம் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டத்தால் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 850 ரூபாய்க்கும் மேல் சேமிக்க முடிகிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானது, கோடிக்கணக்கான பெண்களுக்குப் பொருளாதார விடியலைக் கொடுத்துள்ளதன் அடையாளமான இந்தத் திட்டமானது, இனி 'விடியல் பயணம்' என்று பெயர் சூட்டப்படுகிறது. மகளிர் வாழ்க்கையில் இனி அவர்கள் பெறப் போகிற அனைத்து விடியலுக்குமான தொடக்கப் பயணமாக இது தொடரும்.

• இதே போன்ற ஒரு மகத்தான திட்டம்தான் பள்ளி மாணவர்களுக்குத் தரப்படும் காலை உணவுத் திட்டம். முதலமைச்சர் என்ற முறையில் ஒரு பள்ளியில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட போது, ஒரு சில மாணவர்கள் சோர்வாக இருப்பதையும் முகம் வாடி இருப்பதையும் பார்த்தேன். ஏனென்று கேட்டபோது, காலையில் சாப்பிடவில்லை என்று சொன்னார்கள். ஏழைக் குடும்பத்து தாய்மார்கள் அருகில் உள்ள நிறுவனங்களிலோ, அக்கம் பக்கத்து வீடுகளிலோ வேலைக்குச் செல்லக்கூடிய நிலையில், தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்குக் காலை உணவைக்கூட சரியாகத் தர முடியவில்லையே என்ற கவலையும் தவிப்புமாக அவர்கள் வேலை பார்ப்பதும், சாப்பிடாமல் பள்ளிக்கு வந்த குழந்தைகள், உடல் சோர்வினால் பாடத்தை சரியாக புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறுவதையும் உணர்ந்து கொண்டேன்

திராவிட மாடல் அரசு பிள்ளைகளுக்குத் தாயாக, தாய்மார்களுக்குப் பிள்ளையாக இருந்து செயலாற்றுகிற அரசு. அதனால்தான், கடந்த ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் அன்று 1 முதல் 5ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

**ஆக 25 முதல் விரிவுபடுத்தப்படும்**
**முதல்வரின் காலை உணவுத்திட்டம்!**

இந்தத் திட்டம் பற்றி அமைச்சர்கள், அதிகாரிகள், வல்லுநர்கள் ஆகியோரிடம் ஆலோசித்த போது, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுபோல பள்ளி நாட்களில் காலை நேரத்தில் இதுபோன்ற உணவு வழங்கப்படுவதில்லை எனத் தெரிவித்தார்கள். இந்தியாவுக்கு முன்னோடித் திட்டங்களை வழங்குகின்ற மாநிலம், தமிழ்நாடு என்கிற வரலாறு தொடரட்டும் என்றேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டத்தால் மாணவர்களின் வருகை அதிகரித்து, அவர்கள் தடையின்றிக் கல்வி பெறுதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, வரும் கல்வியாண்டு முதல் 31 ஆயிரத்து 8 அரசுப் பள்ளிகளில் பயிலும், 15 லட்சத்து 75 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் வரும் ஆகஸ்ட் 25ஆம் நாள் முதல் மாநிலம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளில் விரிவுபடுத்தப்பட உள்ளது. எதிர்கால சிற்பிகளாம் மாணவர்களின் உடல்நலனும், உள்ள வலிமையும் காத்திடும் வகையில் விரிவாகக்கப்படும் காலை உணவு திட்டத்தை, நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி எனப் போற்றக்கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயின்ற திருக்குவளைப் பள்ளியில் தொடங்கி வைக்க இருக்கிறேன். இதற்கென இந்த நிதியாண்டில் 404 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# மகளிர் இலவசப் பேருந்துப் பயணம் - இனி 'விடியல் பயணம்!'

# சென்னை கதீட்ரல் சாலையில் ரூ.25 கோடியில் "கலைஞர் நூற்றாண்டு பூங்கா!"

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

3-ஆம் பக்கத் தொடர்ச்சி!

•அரசின் சார்பில் திட்டங்களை அறிவித்தால் மட்டும் போதாது. அது முழுமையாக செயல்படுத்தப் படுகிறதா என்பதை கவனித்து, நிறைவேற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் இருக்கிறது எனக் கருதுகிற காரணத்தால், மாவட்டங்கள் தோறும் அரசின் திட்டங்களின் நிலவரம் குறித்த ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறேன். அப்படிப்பட்ட ஓர் ஆய்வுப் பணியின் போது, அங்கன்வாடி ஒன்றில் நான் பார்த்த ஒரு குழந்தை மிகவும் மெலிந்திருந்தது. அதற்குக் காரணம் கேட்டபோது, சத்துக் குறைபாடு என்று அங்கன்வாடி பணியாளர்கள் தெரிவித்தார்கள். இதுகுறித்து, சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, அதேபோல் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள குழந்தைகள் குறித்த மாநிலம் முழுவதுக்குமான புள்ளிவிவரத்தைக் கேட்டேன்.

**ஊட்டச்சத்து வழங்க உருவாக்கப்பட்ட திட்டம்**

எனக்குக் கிடைத்த புள்ளிவிவரம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். உடல் வலிமை இருந்தால்தான் உள்ள வலிமையும் இருக்கும். சிறப்பான எதிர்காலமும் அமையும். எனவே ஊட்டச்சத்து வழங்க ஒரு திட்டத்தை உருவாக்கச் சொன்னேன்.

## 55 ஆயிரம் அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும்!

'ஏற்றமிகு ஏழு திட்டங்கள்' என கடந்த மார்ச் 1ஆம் நாள் வந்த நாளிதழ்களில் செய்தியைப் பார்த்திருப்பீர்கள். அந்த ஏழு திட்டங்களில் ஒன்றுதான், ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்!

ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் அது. கடந்த ஓராண்டு காலத்தில் சுமார் 10 இலட்சம் குழந்தை கள் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, அதில் சுமார் 92 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாடுடன் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த சிறப்பு உணவுப்பொருட்கள் அளிக்கப்பட்டதன் வாயிலாக சுமார் 62 ஆயிரம் குழந்தைகள் தங்களது ஊட்டச்சத்து நிலையில் நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். அதில் சில குழந்தைகளை கோட்டைக்கு அழைத்து வரச் சொல்லி சந்தித்தேன்.

> **பரந்து விரிந்த இந்திய நாட்டில் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கிறார்கள். பல்வேறு மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். பல்வேறு வழிபாட்டு நம்பிக்கை கொண்டவர்கள் வாழ்கிறார்கள். மாநிலத்திற்கு மாநிலம் உடை மாறுபடுகிறது. மாநிலத்திற்கு மாநிலம் உணவு மாறுபடுகிறது. மாநிலத்திற்கு மாநிலம் உணர்வும், உணர்ச்சியும் மாறுபடுகின்றன. பண்பாடும், பழக்க வழக்கங்களும் மாறுபடுகின்றன. இவ்வளவு வேற்றுமை இருந்தாலும் அந்த வேற்றுமை களை மறந்து ஒற்றுமையாக வாழ்கிறோம். ஒரு குடையின் கீழ் வாழ்கிறோம் என்பார்களே, அதே போல ஒரு கொடியின் கீழ் நாம் வாழ்கிறோம். அதுதான் இந்த மூவண்ணக் கொடி.**

நான்கு வயது வருண் இரண்டு வயது நுசாய்பா இரண்டரை வயது சாய்திரன் ஆகி யோரை என்னிடம் அழைத்து வந்திருந்தார்கள். மிக மிக ஆரோக்கியமாக இந்த குழந்தைகள் வளர்ந்து வருவதை நான் அறிந்தேன். இவர்களைப் பார்க்கும்போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இந்தத் திட்டத்தின்கீழ் பிறவியிலேயே குறை பாடுகள் கொண்ட 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, தற்போது அவர்கள் நலமாக உள்ளனர்.

## முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாநிலம் முழுவதும் விரிவாக்கம்!

இதுபோலவே, ஆறு மாதம்வரை உள்ள குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கெனச் சிறப்பு கூடுதல் சத்துணவு அளிக்கப்பட்டதால், சுமார் 14 ஆயிரம் குழந்தைகள் நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். இந்தத் திட்டம் ஊட்டச்சத்தின் முக்கியத்து வம் குறித்து இளம் தாய்மார்களுக்கிடையே நல்லதொரு தாக்கத்தை உருவாக்கியுள்ளது.

அடுத்து என்னுடைய கனவுத் திட்டமான, 'நான் முதல்வன்' திட்டத்தை நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய நீங்கள்தான் என்னை முதலமைச்சராக்கினீர்கள். நான் முதல்வராக இருந்தாலும், என்னை முதலமைச்சராக்கிய உங்கள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் உள்ள பிள்ளைகள் தங்கள் திறனை மேம்படுத்தி, நான் முதல்வன் என்று சொல்லக்கூடிய வகையிலே சிறந்து விளங்க வேண்டும் என்பதுதான் என் எண்ணம்.

இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த ஓராண்டில் மட்டும் சுமார் 13 லட்சம் மாணவர்களுக்கு வெற்றிகரமாக பயிற்சி அளிக்கப்பட்டு அதில் மூன்றரை இலட்சத்திற்கும் மேலான மாணவர்கள் பல்வேறு பணிகளில் அரசின் உதவியுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். திறன் மிகுந்த ஒரு தலைமுறையை உருவாக்குவதும், அதற்கேற்ற பணி வாய்ப்புகளை அவர்கள் பெறு வதும் தான் எனக்கு முழுமையான மகிழ்ச்சியைச் தருகிறது.

இந்தத் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தும் வகையில் இன்னொரு முன்னெடுப்பை இந்த விடுதலை நாளில் அறிவிக்கிறேன். தாய்நாட்டிற்காகத் தங்களுடைய இளம் வயதை நாட்டின் எல்லையில் இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவுபெற்று திரும்பும் முன்னாள் ராணுவத்தினர் பயன்பெறும் வகையில், சுமார் ஏழு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரம் நபர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி, திறனை மேம்படுத்தவும், அவர்கள் உரிய பணியில் அமரும் வரையில் தக்க உதவி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி, பல்வேறு நகரங்களிலும் இன்று நாம் அடிக்கடி காணக்கூடிய காட்சி ஒன்று. ஓலா, ஊபர், ஸ்விகி, ஸொமட்டோ போன்ற நிறுவனங்களைச் சார்ந்த வாகனங்கள் விரைவாக சேவை வழங்கும் நோக்கத்துடன் பயணிப்பதைக் காணலாம்.

நேரத்தின் அருமை கருதி பணிபுரியும் இத்தகைய பணியாளர்களின் வாழ்க்கை முக்கியமானது. அவர்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கென தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்பதையும் இன்று அறிவிக்கிறேன்.

ஆட்டோ ஓட்டுநர் களாகப் பணிபுரியும் பெண்கள் புதிதாக ஆட்டோ வாங்குவதற்கென ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 141 பேர் பயனடைந் துள்ள நிலையில், தற்பொழுது மேலும் 500 மகளிர் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். மேலும், ஆட்டோ ஓட்டு நர்களாகப் பணி புரியும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுப் படுத்தப் படும்.

அதுமட்டுமல்ல, சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்கா விற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் 25 கோடி ரூபாய் செலவில் "கலைஞர் நூற்றாண்டு பூங்கா" ஒன்று அமைக்கப் படும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.

திட்டங்கள் இல்லாத நாளே இல்லை என சொல்லக்கூடிய வகையில், அரசு அறிவிக்கும் திட்டங்களை கடைக்கோடி மக்களிடமும் கொண்டு போய் சேர்க்கின்ற பெரும் பொறுப்பை ஏற்றிருப்ப வர்கள் அரசு ஊழியர்கள். ஆட்சி சக்கரம் சுழல்வதற்கு அவர்களே காரணமாக இருக்கிறார்கள். அந்த சக்கரம் வேகமாக சுழல்வதும், மெதுவாக சுழல்வதும் அரசு ஊழி யர்களின் கைகளில்தான் உள்ளது. அந்தக் கைகள் ஆரோக்கியத்துடன்இருக்க வேண்டும். அப்போது தான் வேகம் அதிகமாகும் என்பதை எப்போதும் உணர்ந்திருப்பது திராவிட மாடல் அரசு.

**அனைவருக்குமான அரசு என்பதன் அடையாளம்!**

எனவே, நடப்பாண்டுகளில் பல்வேறு துறை களைச் சார்ந்த சுமார் 55 ஆயிரம் பணியிடங் களை நிரப்ப இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த விழாவில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்குமான அரசு என்பதன் அடையாளமாக இதுபோன்ற திட்டங்களைச் சிந்தித்து சிந்தித்து செயல்படுத்தி வருகிறோம்.

எட்டுக் கோடி மக்களும் ஏதாவது ஒரு விதத்தில் பயனடையும் ஆட்சியை நமது அரசு வழங்கி வருகிறது.

கல்வி, பொருளாதாரம், மருத்துவம், வேளாண்மை, ஏற்றுமதி, திறன் மிகு மனித ஆற்றல் ஆகிய அனைத்து வகையிலும் தமிழ்நாடு சிறப்பான பங்களிப்பை இந்திய நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும் வழங்கி வருகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் அரசின் சமூகநீதி நிர்வாக ஆட்சி முறை இந்தியா முழுமைக்குப் பரவுமானால், அதை விட மகிழ்ச்சியான செய்தி எதுவும் இருக்க முடியாது.

**மாநிலப் பட்டியலுக்கு கல்வி மாற்றப்படவேண்டும்!**

கூட்டாட்சி இந்தியாவில் இணைந்திருக்கும் மாநிலங்கள் சுயாட்சி உரிமை கொண்டதாகச் செயல்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா வும் தலைவர் கலைஞரும் தொடர்ந்து குரல் எழுப்பி வந்தார்கள். மக்களுக்கு நேரடித் தொடர்பு கொண்ட அனைத்தும் மாநிலப்பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக கல்வி, மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.

அதைச் செய்தால்தான் நீட் போன்ற கொடூர மான தேர்வு முறை முற்றிலுமாக அகற்றப்பட முடியும்.

மாநிலங்கள் ஒருங்கிணைந்த நம் இந்திய நாடு பல்வேறு இனம் மொழி மதம் பண்பாடு கொண்ட மக்கள் அனைவரது வளர்ச்சியையும் கொண்ட தாக வளர வேண்டும்.

சமூகநீதி சமத்துவம் சகோதரத்துவம் - சமதர்மம் மதச்சார்பின்மை ஒடுக்கப்பட்டோர் நலன் ஆகிய மிக உயர்ந்த கோட்பாடுகள் கொண்ட இந்தியாவை அமைப்பதுதான் இந்திய விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். அத்தகைய சமத்துவ, சமதர்ம, சமூக நீதி இந்தியாவை அமைப்பதுதான் இந்திய விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

ஒற்றுமையால் கிடைத்த விடுதலையை அதே ஒற்றுமையால் காப்போம். வேற்றுமையை விதைக்கும் சக்திகளை வேரோடு சாய்ப்போம். நாம் இந்தியர்கள் என்ற பெருமையுடன் நம் இந்தியாவை நேசிக்கும் அனைவருக்கும் விடுதலை நாள் நல் வாழ்த்துகள்.

தியாகிகள் புகழ் வாழ்க!

தீரர்கள் புகழ் வாழ்க!

வாழ்க தமிழ்!

வளர்க இந்தியா!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்
மொத்த விலை (இனவிலை முறை)
மின்னணு முறை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.17/BCM/CBE/2023-24/நாள்.14.08.2023
தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் சிறப்பு தலைமைப் பொறியாளர், பொபது., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் (1) திருப்பூர் மாவட்டம், காங்கயம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த கூடுதல் படுக்கை வசதியுடன் கட்டப்படும் கூடுதல் கட்டடத்திற்கு மின் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் (2) திருப்பூர் மாவட்டம் திருப்பூர் தொகுதி வெள்ளிரவெளி அரசு மேல்நிலை பள்ளிக்கு 6 வகுப்பறைகள் கட்டும் பணி (இரண்டாம் அழைப்பு) ஆகிய பணிகளுக்கு இனவிலை முறை ஒப்பந்தப்புள்ளிகள் அரசு மின்னணு கொள்முதல் வலைதளத்தில் (e-procurement portal of Government of Tamilnadu) இணையவழி முறையில் 05.09.2023 பிற்பகல் 03.00 மணி வரை பதிவேற்றம் பெறப்பட்டு அன்றே பிற்பகல் 04.30 மணி முதல் திறக்கப்படும்.
இதர அனைத்து விவரங்களும் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.
செ.ம.தொ.இ/4548/ஒப்பந்தப்புள்ளி/2023
சிறப்பு தலைமைப் பொறியாளர், பொபது.,
கட்டட கட்டுமானம் & பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் - 641001
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஏ. மதியழகன்

**ஆகஸ்ட் 17 (1983)**



**தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் வழிநடந்த தன்மான தளகர்த்தர். தலைவர் கலைஞர் அவர்களது உடன்பிறப்பு, நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக திராவிடர் நலம்நாடி உழைத்த பெருமகனார்.**

**இயக்கப் பணியிலும், அறப்போராட்டத்திலும் முன்னின்று செயலாற்றி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்.**

**தமிழக அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**"தமிழ் இனம் காக்க – மொழி காக்க தடந்தோள் உயர்த்திய தளபதி" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

மாமல்லபுரத்தில்

## தமிழ்நாடு சர்வதேச 2வது காற்றாடி திருவிழா!

**அமைச்சர் கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு, காற்றாடி கலைஞர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கினார்!**

*மாமல்லபுரம், ஆக. 17-*

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை தனியாருடன் இணைந்து மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை காட்சி (ஓசன் வியூ) திடலில் 2வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழா 12.08.2023 அன்று தொடங்கி நடைபெற்று வந்தது.

சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (15.08.2023) காத்தாடி திருவிழாவினை பார்வையிட்டு, பொதுமக்களுடன் கலந்துரையாடினார். இந்த விழாவிற்கு வந்திருந்த பொதுமக்கள் (இந்தியாவில் வசிக்கும் ஜப்பான் நாட்டு பெண் உள்பட) காத்தாடி திருவிழா நடத்துவதற்காக தமிழ்நாடு அரசிற்கும், முதலமைச்சருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப்நந்தூரி, முன்னிலையில் காத்தாடி கலைஞர்களுக்கு மாமல்லபுரம் கடற்கரை கோயில் நினைவு சின்னத்தை பரிசாக வழங்கினார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கி வருகின்றார். குறிப்பாக சுற்றுலாத்துறையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் செஸ் ஒலிம்பியாட் போட்டியை சிறப்பாக நடத்தி உலக சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்த்ததன் காரணமாக உலகின் பல்வேறு துறைகளை சேர்ந்த முக்கியமானவர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

தொடர்ந்து சுற்றுலாத்துறையின் மூலமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா, மலைவாசஸ்தலங்களில் கோடைவிழாக்கள், பொள்ளாச்சியில் பலூன் திருவிழா, சென்னை தீவுத்திடலில் வெளிநாடுகள், வெளிமாநிலங்களைச் சேர்ந்த கைவினை கலைஞர்கள், கைத்தறியாளர்கள் பங்கேற்ற சென்னை விழா என சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையிலான நிகழ்ச்சி கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.பி. பச்சையப்பன்

**ஆகஸ்ட் 16 (2022)**



**தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**1964ஆம் ஆண்டு கள்ளக்குறிச்சி வட்டச் செயலாளராகவும், அதனை தொடர்ந்து 1991 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1967ல் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**ஒன்றிய பெருந்தலைவராகவும் , பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் இருந்தவர்.**

**1964ல் கடலூரில் இந்தி எதிர்ப்பு அறப்போரில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. ஆனந்தன்

**ஆகஸ்ட் 17 (2010)**



**நீதி கட்சித் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் பேச்சாற்றலாலும் இளமை பருவத்தில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.**

**35 ஆண்டுகாலம் தொடர்ந்து பி.என்.பாளையம் ஊராட்சிச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இரயில் மறியல் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




**தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள்**

புதுடெல்லி


நாள் : 17.08.2023 வியாழக்கிழமை
இடம் : முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் திடல், பேராவூர்.
தென்மண்டல BLA -2
பயிற்சி பாசறை கூட்டத்தை
துவக்கி வைக்க வருகை தரும்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களே வருக. வருக..
ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (ம) கதர்கிராம தொழில் வாரிய அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம்
மாவட்டக் கழகச் செயலாளர் – இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர்
இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.
ARASU ARTS


WE FIGHT FOR OUR RIGHTS
நாள் : 17.08.2023
வியாழக்கிழமை
இடம் : முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் திடல்,
பேராவூர்.
இந்தியாவின்
இன்னொரு சுதந்திரப்
போராட்ட களம் அமைக்க
தென் மண்டல வாக்குச் சாவடி
பாக முகவர்கள் (BLA-2)
பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில்
உரையாற்ற வருகை தரும்
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே
வருக. வருக..
ARASU ARTS
வரவேற்று மகிழும்
கே.ஆர்.பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர்
மாவட்டச் செயலாளர்
சிவகங்கை
மாவட்ட தி.மு.க.

# கனிமொழியின் நாடாளுமன்ற பேச்சும் நிர்மலா சீதாராமனின் புலம்பலும்!

ஒன்றிய பா ஜ.க. அரசின் மீது - பிரதமர் நரேந்திர மோடி அரசின் மீது 'இந்தியா' அணியைச் சேர்ந்த எதிர்க்கட்சிகள் எல்லாம் கூடி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தன. அதன் மீது மிகக் காரசாரமான விவாதம் நடைபெற்றது. நாடாளுமன்றக் கழகக் குழுவின் துணைத் தலைவர் கனிமொழி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது கலந்து கொண்டு கடந்த ஆகஸ்ட் 10 ஆம் தேதி உரையாற்றினார். அப்படி உரையாற்றியபோது இரண்டு முக்கியப் புள்ளிகளை எடுத்து வைத்தார். அவை வருமாறு:

**(1) "இங்கே பேசிய உறுப்பினர்கள் மகாபாரதத்தில் வரும் திரவுபதியை சுட்டிக் காட்டிப் பேசினார்கள். (குறுக்கீடு) மணிப்பூர் பெண்களும் அதேபோல தங்களைக் காப்பாற்றுமாறு கடவுளிடம் வேண்டினார்கள். கடவுளும் உதவ வரவில்லை. அரசும் வரவில்லை. மகாபாரதத்தை ஒழுங்காக படித்தவர்களுக்கு தெரியும். திரவுபதி விவகாரத்தில் குற்றம் செய்தவர்கள் மட்டுமல்ல, அதைப் பார்த்துக்கொண்டு மரம் போல நின்றிருந்தவர்களும் தண்டிக்கப்பட்டார்கள். மணிப்பூர் விவகாரத்தில் மட்டுமல்ல ஹத்வாஸ், உனாவ், பில்கிஸ் பானு, ஏன் சமீபத்தில் போராடிய மல்யுத்த வீராங்கனை விவகாரம் வரை மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தவர்களை இந்த தேசத்தின் தாய்மார்கள் நிச்சயம் தண்டிப்பார்கள்."**

**(2)"நீங்கள் புதிய நாடாளுமன்றத்திற்கு செங்கோலைக் கொண்டு வந்து வைத்துள்ளீர்கள். சோழர்களின் செங்கோல் என்றும் சொல்லிக் கொள்கிறீர்கள். நீங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றை முறையாக அறியவில்லை. சாமானியர்களின் கோபத்தால் சரிந்த பாண்டியன் செங்கோல் பற்றி அறிவீர்களா? கண்ணகியின் கோபம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? இந்தி திணிப்பதை விட்டுவிட்டு சிலப்பதிகாரத்தை ஒழுங்காக படியுங்கள். அது பல பாடங்களை உங்களுக்குக் கற்றுத் தரும்."**

இப்படி கனிமொழி எடுத்து வைத்த கருத்துகளுக்கு எதிர்கருத்தாக ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பைக் காப்பாற்றும் விதமாகவும் பிரதமரிடம் ஒரு 'ஷொட்டு' பெறவும் சில பழைய புலம்பல்களை மாபெரும் கருத்தாக நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்தார். அந்தக் கருத்துகள் கீழ்க்காணும்படி நாளேடுகளில் பதிவாகி இருப்பதை இங்கே எடுத்து வைத்து இருக்கின்றோம்.

(1) நீங்கள் மகாபாரதக் கவுரவர்களின் சபை குறித்து பேசுகிறீர்கள். திரவுபதி பற்றி பேசுகிறீர்கள். ஜெயலலிதாவை அவ்வளவு சீக்கிரம் தி.மு.க. மறந்துவிட்டதா? நம்ப முடியவில்லை. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதை பிரதமர் மோடி நிறைவேற்றிக் காட்டுகிறார்.

கடந்த 1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதாவின் புடவையை இழுத்து அவமானப்படுத்தியவர்கள் தி.மு.க.வினர். அப்போது முதல்வராக பதவியேற்ற பிறகுதான் சட்டப் பேரவைக்குள் நுழைவேன் என்று சபதம் செய்து 2 ஆண்டுகளுக்கு பிறகு முதல்வராகி சபதத்தை நிறைவேற்றிக் காட்டியவர் ஜெயலலிதா"

**- இந்து தமிழ்திசை (11.08.2023)**

(2) "சிலம்புச்செல்வர் என்று அழைக்கப்பட்ட ம.பொ.சி. சிலப்பதிகாரத்தில் புலமை பெற்றவர். அதனால் அவர் 1951-இல் எழுதியதைக் கூறுகிறேன். 'சிலப்பதிகாரம் கூறுவது நாம் திராவிடர் அல்லர், நாம் தமிழர். நமது தாயகம் திராவிடமல்ல, தமிழகம், தமிழகத்தின் வடக்கு எல்லை விந்தியம் அல்ல..வேங்கடம். தமிழ்நாட்டு அந்தணர் ஆரியர் அல்லர் தமிழர்.

தமிழர்களின் பழக்க வழக்கங்களும், வேங்கடத்துக்கு வெளியே உள்ளவர்களின் பழக்க வழக்கங்களும் வேறுபட்டவை. ஆனால், விரோதமானவை அல்ல' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது என்று எழுதியுள்ளார். நாம் திராவிடர் அல்ல என்று சிலப்பதிகாரம் கூறுகிறது"

**- தினமணி (11.05.2023)**

கனிமொழி நாடாளுமன்ற உரைக்கு இடையில் குறுக்கிட்டு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தனது இதிகாச, வரலாற்று அறிவை நாடாளுமன்றத்தில் புலப்படுத்தி இருக்கிறார். அவருடைய 'சமயோசித' அறிவைக் கண்டு அவர்கள் வட்டாரத்தில் வியப்பு அடையலாம். அவருடைய மேன்மையை "ஆஹா.." என்று பாராட்டி இருக்கலாம். திராவிட இயக்கத்தைப் பொருத்தவரையில் டி.எம்.நாயர் காலத்திலிருந்து நாம் சந்தித்த வினாக்களையே இவரும் எழுப்பி இருக்கிறார். புதிதாக அவரது பதிலைக் கேட்பவர்கள்தான் - விவரம் தெரியாதவர்கள்தான் நிர்மலா சீதாராமனுக்கு 'சபாஷ்' போடுவார்கள். ஆஹா....நிர்மலா கனிமொழிக்கு என்னமாய் பதிலளித்து விட்டார். என்று புளகாங்கிதம் அடைவார்கள். நூறாண்டுகளுக்கு மேலாக நிர்மலா போன்றவர்கள் இந்த மாதிரி பதில்களை அளித்து, கேட்டு கேட்டு வரலாற்றின் பக்கங்களைப் பார்க்கிறபோது ஒருவித சலிப்பே நமக்கு ஏற்பட்டுவிட்டது. ஆனால் நாம் ஏன் நிர்மலாவுக்கு இந்தப் பதிலை எழுதுகிறோம் என்றால் புதிய தலைமுறையினர் இதிகாசம், இலக்கியங்கள் பற்றிய திராவிட இயக்கத்தின் பார்வைகளையும் கருத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

மேலும் நிர்மலா போன்றவர்கள் நாடாளுமன்றத்தில் அமர்ந்து கனிமொழிக்கு பதில் சொல்வதால் உலகச் செவிகளில் அது விழுகிறது. உண்மையாய் இருக்குமோ என்ற அச்சத்தையும் நம் இயக்கத்தின்மீது நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்திவிடும். ஆகவே நிர்மலாவின் கூற்றுக்கு நாம் பதில் அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கனிமொழி, மகாபாரத பாத்திரமான திரவுபதியை நினைவு கூர்ந்து மணிப்பூர் பெண்களும் கடவுளிடம் வேண்டியும் காப்பாற்றப்படவில்லை. இந்தியாவின் பிற பகுதிகளில் பெண்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்று சுட்டிக்காட்டினார். பெண்களின் பாதிப்புகளை ஒன்றிய அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. மகாபாரதத்தில் திரவுபதியை வேடிக்கைப் பார்த்தவர்கள் கூட தண்டிக்கப்பட்டார்கள். அதேபோல இப்போது வேடிக்கைப் பார்க்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை தாய்மார்கள் தண்டிப்பார்கள்.

திரவுபதியை மட்டுமல்லாமல் கனிமொழி கண்ணகியின் கோபத்தால் பாண்டியன் செங்கோல் வளைந்தது பற்றி எடுத்துரைத்ததோடு புதிய நாடாளுமன்றத்தில் செங்கோலை கொண்டு வந்து வைத்து அதனைச் சோழன் செங்கோல் என்று ஒன்றிய அரசு கூறுவதையும் இடித்துரைத்தார். நாடாளுமன்ற மக்கள் அவையில் இருந்த நிர்மலாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கனிமொழிக்கு உடனே பதில் அளித்தார். அந்தப் பதில்கள் நாளேடுகளில் வெளிவந்துள்ளதை மேலே எடுத்துக் காட்டி இருக்கின்றோம்.

திரவுபதியை கவுரவர்கள் நிர்வாணப்படுத்த முயன்ற போது கிருஷ்ணர் சேலையை வளரவிட்டு பெண்ணின் மானத்தைக் காப்பாற்றினார். மணிப்பூர் பெண்களையும் பாதிக்கப்பட்ட இதர பெண்களையும் கடவுள் காப்பாற்றவில்லை. அரசு காப்பாற்ற வேண்டாமா? - என்று கனிமொழி கேட்கிறார். அதற்கு நேரடியாக பதில் தராமல் மார்ச் 25/1989 இல் ஜெயலலிதாவை தி.மு.க.வினர் சட்டமன்றத்தில் இழிவு படுத்தினர். அவமானப்படுத்தினர் என்று பேசி இருக்கிறார். அதோடு சிலம்புச்செல்வர் ம.பொ.சி.யையும் அவரது சிலப்பதிகார ஆராய்ச்சியைக் கொண்டு வந்து நிறுத்துகிறார். கனிமொழிக்கு அவர் கூறிய பதில் பொருத்தமானது' இல்லை.

**க.திருநாவுக்கரசு**
**திராவிட இயக்க எழுத்தாளர்**



ஸ்மிருதி இரானியும் பிரதமர் மோடியும் பொய்யான தகவல்களை நாடாளுமன்றத்தில் வந்து பேசுவதைப் போல்தான் நிர்மலாவும் பேசுகிறார். 1989 மார்ச் 25-இல் என்ன நடந்தது? - என்பதை நம்மால் இங்கே முழுவதும் எழுத முடியும். ஆனால் கட்டுரை நீண்டு விடும். ஆகவே அதைப் பற்றி சில பதிவான கருத்துகளை கூறியாக வேண்டும். 1989 மார்ச் 25-ஆம் தேதியை மீண்டும் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா கூறுவதால் அதைப் பற்றிய ஒரு நிகழ்வை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகின்றோம்.

1989 மார்ச் 29 ஆம் தேதி தமிழக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா மீது வழக்குத் தொடர்ந்துள்ளது மற்றும் எதிர்க்கட்சித் தொண்டர்கள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து சட்டமன்றத்தில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். அதைப் பற்றி எல்லா விவரங்களையும் நாம் இங்கே எடுத்துச் சொல்லப் போவதில்லை. ஆனால் நிர்மலா என்ன சொல்கிறார், '....ஜெயலலிதாவின் புடவையைப் பிடித்து அவமானப்படுத்தியவர்கள் தி.மு.க.வினர்' என்று! அப்படிச் சட்டமன்றத்தில் நடந்ததா? என்கிற செய்தியை நாம் விளக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். மார்ச் 25-இல் நடந்த சட்டமன்ற நிகழ்வில் மோசமான நடவடிக்கைகள் எதுவும் சட்டமன்றக் குறிப்புகளில் பதிவாகவில்லை. நாளேடுகளிலும் அப்படிப் பதிவாகவில்லை. தி.மு.க.வினர் அப்படி அவமானப்படுத்திய செய்தி எதுவும் இல்லை. ஆனால் நிர்மலா எதனை வைத்து கூறுகிறார்?

திருநாவுக்கரசு கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது குறுக்கிட்டு துரைமுருகன் பேசிய பேச்சு பதிவாகி இருக்கிறது. இப்பேச்சை நிர்மலா படித்துப் பார்க்க வேண்டும். இதே தீர்மானத்தின் மீது கலைஞர் மிக நெகிழ்ச்சியாகப் பேசினார். அந்தப் பேச்சை அப்படியே வெளியிடுவதன் மூலம் நிர்மலா தெளிவு பெறுவார் என்று கருதுகின்றோம். இங்கே நாம் கலைஞரின் பேச்சை மட்டும் வெளியிடுகின்றோம்.

**"பேரவைத் தலைவர் அவர்களே, துரைமுருகன் அவர்களே மறுத்த பிறகு, ஒரு சட்டமன்றத்திலோ அல்லது வேறு ஒரு மன்றத்திலோ அல்லது ஒரு நிகழ்ச்சியிலோ ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டு அதை அவர் மறுத்துவிட்டால், இல்லை என்று சொல்லிவிட்டால், அதோடு அதை விட்டு விடுவதுதான் மரபு. அதையே பெரிதுபடுத்தி நான் காங்கிரஸ் கட்சி நண்பர்களைச் சொல்லவில்லை - அதை ஒரு அரசியல் ஆதாயம் ஆக்கி அனுதாபத்தைப் பெறலாம் என்று எண்ணுவது தவறு. நான் மூப்பனார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.**

**ஒரு பெண் மானபங்கம் படுத்தப்பட்டதைப் பற்றி சொல்கிறீர்கள். அப்படி ஒன்று நடந்து இருந்தால் நான் இப்போதும் சொல்கிறேன், வெட்கப்படுகிறேன். அவர்கள் எனக்கு சகோதரி போன்றவர்கள்தான். என்னுடைய சகோதரிக்கு ஒன்று நடந்து இருந்தால் என்ன உணர்வு எனக்கு எற்படுமோ அதே உணர்வுதான். அன்று நடந்த அசம்பாவிதத்தில் யார் என்று அடையாளம் காண முடியாத ஒரு குழப்பத்தில் வேண்டும் என்றே ஒரு அமைச்சர் மீது துரைமுருகன் மீது குற்றம் சாட்டப்பட்டதால்தான் அதை மறுக்க வேண்டி வந்தது.**

**கடந்த காலத்தில் என்னுடைய மனைவி, மக்கள் அனைவரும் விமான நிலையத்திலே இரவிக்கை கிழிக்கப்பட்டு, சேலை கிழிக்கப்பட்டு போலீசாரால் இப்படி நடத்தப்பட்ட போது யாராவது இப்படித் துடித்தீர்களா? என்ன காரணம்? யாராவது இப்படித் துடித்தார்களா? யாரும் துடிக்கவில்லை. யாரும் ஒரு மறுப்பு அறிக்கைவிடவில்லை. அதற்காக நான் இதை சரி என்று சொல்லவில்லை. காரணம் நான் ஒரு சாதாரணமானவன், கேவலமானவன்,இன்னும் சொல்லப் போனால் சூத்திரன் நான். அவ்வளவுதான்"**

நிர்மலா என்ன நிகழ்வு நடந்ததாகச் சொல்கிறாரோ அந்த நிகழ்வு ஜெயலலிதாவுக்கு எற்படவில்லை. முதல்வர் கலைஞர் 1989-90 பட்ஜெட் உரையைப் படிக்க தொடங்குகிறபோது கலைஞரைப் பார்த்து 'குத்துடா அவனை' என்று சொன்னவர் யார்? கலைஞரைத் தாக்கியவர் யார்? அவர் அணிந்திருந்த கண்ணாடி கீழே விழுந்து ஒடிந்தது எப்படி? பட்ஜெட் படிப்பதற்குத் தோதாக வைத்திருந்த சிறுமேசை சரிந்தது எப்படி? இவையெல்லாம் தொடங்கப்பட்டதே ஜெயலலிதாவினால்தான்! அங்கிருந்துதான் குழப்பமே ஆரம்பமாகியது, மார்ச் 25/1989 முழு விஷயங்கள் அவைக் குறிப்பில் இருக்கின்றன. அதில் நிர்மலா சொல்லுகிற செய்தி-நிகழ்வு இடம் பெறவில்லை என்பதே நமது வாதம். சட்டமன்றத்தில் அப்படி ஒரு அபவாதத்தை தோற்றுவித்து சூத்திரர் என்பதால் ஆட்சிக்கு எதிராக சிக்கலை ஏற்படுத்தவே ஒரு அசம்பாவிதத்தை உருவாக்கியவர் ஜெயலலிதா என்பதை கலைஞர் ஆற்றிய ஒத்திவைப்புத் தீர்மான உரை நமக்கு எடுத்துக் கூறுகிறது. இதற்கு மேல் என்ன ஆதாரம் வேண்டும்?

கனிமொழி, கண்ணகியின் கோபத்தைக் காட்டி - பாண்டியனின் வளைந்த செங்கோலைப் போல சோழர்களின் செங்கோல் என்று நீங்கள் புதிய நாடாளுமன்றத்தில் காட்சிப் படுத்தினாலும் மணிப்பூர் பிரச்சினையால் உங்கள் செங்கோல் வளைந்துவிட்டது என்று மோடி ஆட்சியைப் பார்த்து கேட்கிறார். அதற்கு நிர்மலா, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. எழுதிய அந்தணர் - தமிழர் - திராவிடர் பற்றிய செய்திகளைக் கனிமொழிக்குப் பதிலாக எடுத்துக் கூறியிருக்கிறார். இது பொருத்தமாக இல்லையே.

கனிமொழி அவரது உரையில் இப்பிரச்சினைகளைப் பற்றி பேசியிருக்கிறாரா, இல்லையே? 'மொட்டை தாதன் குட்டையில் விழுந்தான்' என்பது போல் நிர்மலா பேசுகிறாரே, குழம்பி போயிருக்கிறாரா? ஆரியர் - அந்தணர் பிரச்சினைப் பற்றி சைவ சித்தாந்த கலாநிதிகள் ஜே.என்.நல்லசாமிப் பிள்ளை, பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, சூளை சோமசுந்தர நாயகர், எம்.எஸ்.பூரணலிங்கம் பிள்ளை, கா.சு. பிள்ளை, மறைமலையடிகள் எழுதாதையா சிலம்புச் செல்வர் மா.பொ.சி. எழுதிவிட்டார்? ம.பொ.சி. திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்தியதற்காக நிர்மலா இப்படிச் சொல்லி அவரை நினைவு கூருகிறாரா?

தமிழர் - திராவிடர் பற்றிய சிக்கலை கால்டுவெல் மநுவிலிருந்து தொடங்க வில்லையா? சிலப்பதிகார காலத்திற்கு முன்பே தமிழரைத் திராவிடர் என அழைத்துவிட்டனரே, அதற்கு நாம் பொறுப்பு அல்லவே. ஆந்திர - திராவிட பாஷா என்று சமஸ்கிருத இலக்கியவாணர் குமாரிலப்பட்டர் சொல்லவில்லையா? சௌந்தரிய லகிரியில் ஆதிசங்கரர் தம்மையோ அல்லது ஞான சம்பந்தரையோ திராவிட சிசு என்று சொல்லிக் கொள்ளவில்லையா? 'திராவிட உட்கல வங்கா' என்று தேசியப் பாடல் ஒலிக்கிறதே, செவிகளில் விழ வில்லையா? சமஸ்கிருத இலக்கியவாணர்கள் மட்டுமல்ல, அய்ரோப்பிய வரலாற்று ஆசிரியர்களும் திராவிட, திராவிடர்,திராவிடம் என்று எழுதவில்லையா? திராவிட மொழிக் குடும்பம் என்று மொழிவல்லுநர்கள் உரைப்பதிப்பில்லையா? திராவிடக் கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் என்று சொல்வதில்லையா? - இவை அத்தனை யும் தமிழ் - தமிழரை - தமிழ்நாட்டை குறிப்பனவே.

**நிர்மலா வகையறாக்கள் பெரியாரை, பெரியார் என்று கூறமாட்டார்கள்,ஈ.வெ.ரா. என்றுதான் அழைப்பார்கள். பெரியார் 'திராவிடர்' என்கிற சொல்லை நாம் ஏன் பயன்படுத்த வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்தி இருக்கிறார். அவர் சொன்னதை நிர்மலாவுக்கு நாம் சொல்ல விரும்புகிறோம். நம்மைத் தமிழர் என்று கூறிக்கொள்வதை விட நமது எதிரிகள் அஞ்ச தகுந்த விதத்தில் இருப்பதால் நாம் 'திராவிடர்' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றோம் என்ற கருத்துப்பட கூறியிருக்கிறார். 'தமிழர்' என்றால் அவர்கள் எளிதாக ஊடுருவி உள்ளே வந்துவிடுவார்கள் என்பது நமக்குப் பெரியார் சொல்லிக் கொடுத்த பாலபாடம். தமிழர்களுக்கு அதன் எதிரிகள் வழங்கின பெயரைக் கொண்டே இந்த மாபெரும் இயக்கத்தை நடத்தியிருக்கின்றோம்.**

சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் வரலாற்று மதிப்பீடுகளில் தமிழகத்திற்கு நல்லதும் கெட்டதும் உண்டு. அவர் திராவிட இயக்கத்திற்கு எதிரானவர், இந்துத்துவ தமிழ்த்தேசியம் பேசியவர், இந்திய தேசியராய் இருந்து, பின்னர் தமிழ்த் தேசியராய் வளர்ந்து மீண்டும் இந்திய தேசியராய் மறைந்து போனவர். இப்படி அவரைச் சொல்லிக் கொண்டே போகலாம். இப்போது இங்கே நாம் பார்க்க வேண்டியது நாம் திராவிடர் அல்லர் - தமிழர் என்று ம.பொ.சி. கண்டறிந்து விட்டதை நிர்மலா மறுஒலிபரப்புச் செய்துள்ளதைப் பொருத்தமில்லாதது என்று சொல்ல வருகின்றோம். தமிழும் திராவிடமும் ஒன்றே என்று கூறுகின்றோம் நாம். திராவிடம் பல பொருள்களைக் கொண்ட ஒரு சொல்லாகவும் விளங்குகிறது என்பது மற்றொரு கோணமாகப் பார்க்க வேண்டிய ஒன்று.

கம்பனுக்கு முன்பே இளங்கோவடிகள் இராமனை அவதார புருஷன் என்று கூறினார் என்று தமிழகம் முழுவதும் எடுத்துக்கூறியவர் ம.பொ.சி. காப்பியத்தில் உள்ளதை கூறுவது வேறு. அதில் இல்லாத ஒரு சொல்லை எதிர்க்க வேண்டும் என்பதற்காக எடுத்தரைத்து சொல்வது வேறு. ம.பொ.சி. தனித்து நின்று புகழ் அடையவில்லை . அவரைத் திராவிட இயக்கமே 'தமிழுறவால்' உயர்த்திக் காட்டியது என்பதை நிர்மலா தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றோம்.

கனிமொழி மகாபாரதத்தையும் பயிலுபவர், காப்பியங்களையும் படித்துணருபவர். மகாபாரதம் ஒரு இதிகாசம்; 'இப்படியும் நடந்தது' எனும் பல கதைகளின் தொகுப்பு. வர்ண தர்மத்தை நிலைநாட்ட எழுந்த பரப்புரை. ஸ்ருதியையும் ஸ்மிருதிகளையும் காப்பாற்ற எழுந்த ஓர் ஏற்பாடு. மனித மனத்தைக் கரைக்கும் ஜாலவித்தைகளைக் காட்டி தனது மயக்கும் மொழியால் இல்லாத உலகத்திற்கு அழைத்துச் செல்லும் பிறழ் நெறி. ஆகும் நெறிக்கு எதிரான ஆகாநெறி. மோடி, நிர்மலா, ஸ்மிருதி இரானி போன்றவர்கள் ஆதரிக்கும் வெகு மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டின் ஒரு கருவிகளுள் ஒன்று.

**திராவிட இயக்கத்தாரான நாம் இந்தியாவின் தென் கோடியிலிருந்து வர்ணாசிரம சநாதன தர்மத்திற்கு எதிரான போர்க்குரல் எழுப்பி வருகின்றோம். அனைத்தும் மக்களுக்கான சமூகநீதியை நிலைநாட்ட அணிவகுக்கின்றோம். அந்த அணிவகுப்பின் ஆர்ப்பாட்ட போர்ப் பாட்டே நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பப்பட்ட கனிமொழியின் குரல்! நிர்மலாவின் பதில் பழைய புலம்பல்!!**

●

## உங்கள் உழைப்பின் மீது நம்பிக்கை வைத்துள்ள

# முதல்வர் - மகளிர் சுய உதவிக் குழுவுக்கு எப்போதும் துணை இருப்பார்!

## வங்கிக்கடன் வழங்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஆக. 17 -

**“உங்கள் உழைப்பின் மீது நம்பிக்கை வைத்துள்ள முதல்வர் - மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு எப்போதும் துணையாக இருப்பார்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் வங்கிக் கடன் இணைப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசும்போது கூறினார்.**

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக, 1,808 நகர்ப்புற சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 424 பேர் பயன்பெறும் வகையில், கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்குகின்ற நிகழ்ச்சி, 182 நகர்ப்புற வியாபாரிகளுக்கு உணவுத்தரச் சான்றிதழ்கள், திறன்பயிற்சி பெற்ற 100 இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகள் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள், சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த சிறுதொழில் முனைவோருக்குக் கடனுதவிகள், நகர்ப்புறச் சுயஉதவி குழுக்களுக்குச் சிறப்பான முறையில் வங்கிக் கடன் வழங்கிய 6 வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகள், மற்றும் 8 தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்குச் சான்றிதழ் வழங்குகின்ற நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், தமிழ்நாடு, இன்றைக்கு இந்திய ஒன்றியத்திற்கு மட்டுமல்ல, பல்வேறு நாடுகளுக்கும் ஒரு ரோல் மாடலாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில், மகளிர் மேம்பாடு, இளைஞர் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில், பல்வேறு திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள்.

**கனவோடு திட்டங்களை செயல்படுத்தும் முதல்வர்!**

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகித்த காலத்தில் பல மணி நேரங்கள் நின்றுகொண்டே மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் இணைப்புகளை வழங்கிய பெருமையைப் பெற்றவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அவருடைய உழைப்பில் பாதி அளவு உழைத்தால், அதுவே மிகப்பெரிய வெற்றியைக் கண்டிப்பாகத் தரும். அதனை மனதில் வைத்துத்தான் நாங்களெல்லாம், எங்களின் துறையைச் சேர்ந்தவர்களெல்லாம் இன்றும் உழைத்துக்கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டை வளர்ச்சிக்கு எடுத்துச் செல்ல, இன்னும் 100 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு எப்படி இருக்க வேண்டும், என்ற கனவோடு ஒவ்வொரு திட்டத்தையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, மகளிர் மேம்பாட்டிற்காகப் பல்வேறு முன்னோடித் திட்டங்களைப் பார்த்துப் பார்த்து வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் வழிக் கல்வியில் பள்ளிப்படிப்பை முடித்து, உயர்கல்வி செல்லும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்குகின்ற `புதுமைப்பெண் திட்டம்’, `நகரப் பேருந்துகளில் பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி`, மகளிர் சுய உதவிக்குழுக்களில் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்குகின்ற கடன்கள் ரூபாய். 2,800 கோடி அளவிற்குத் தள்ளுபடி, சுய உதவி குழுக்களின் சிறப்பான செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், ரூபாய் 30,000 கோடி அளவிற்கு வங்கிக்கடன் இணைப்பு வழங்க இலக்கு,

**நம்முடைய துறைக்கு பெருமை!**

`இல்லம் தேடிக் கல்வித் திட்டம்’, `மக்களைத் தேடி மருத்துவம்’ போன்ற மகத்தான திட்டங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல்நலன் பேண ஊட்டச்சத்து, வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான திட்டம் என எண்ணற்ற திட்டங்களை, தமிழ்நாட்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

இதில், நாமெல்லாம் பெருமைப்படக்கூடிய ஒரு விஷயமும் உள்ளது. பல்வேறுத் துறைகளை ஒருங்கிணைத்துத்தான் முதலமைச்சருடைய காலை சிற்றுண்டி உணவுத் திட்டம், அதேபோல, மக்களைத் தேடி மருத்துவம் போன்றவைச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மகத்தான திட்டங்கள் அனைத்திலும், நம்முடைய மகளிர் சுயஉதவிக் குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது, நம்முடைய துறைக்குப் பெருமை அளிக்கக்கூடிய விஷயமாகும்.

குறிப்பாக, நம்முடைய தேர்தல் வாக்குறுதியாக, குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், வருகின்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் தொடங்கி வைக்கப்பட உள்ளது. இந்தத் திட்டத்திலும் நம்முடைய மகளிர் சுயஉதவிக் குழுவினர் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். சுயஉதவிக் குழுவினருக்கு மேலும் பெருமை சேர்த்து வருகிறது என்பதை, இங்கு மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**மகளிர் சுய உதவிக்குழு தயாரித்த பொருட்களைத்தான் பயன்படுத்துகிறேன்!**

மகளிர் சுய உதவிக் குழுவினரின் வாழ்வு மேம்பட வேண்டும் என்று அவர்களுக்குத் தேவையான திட்டங்களை, வசதிகளை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், நாங்கள் செயல்படுத்தி வருகின்றோம். நான் எந்த மாவட்டத்துக்கு ஆய்வுக்குச் சென்றாலும், அங்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களினுடைய சகோதரிகள் அமைக்கின்ற அரங்குகளைப் பார்வையிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றேன் என்பது உங்களுக்கே தெரியும். உங்களுடைய தயாரிப்புகளை நான் தொடர்ச்சியாக வாங்கி வருகின்றேன். பிறரையும் வாங்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றேன்.

சட்டமன்றத்தில் பேசும்போது கூட, மானிய கோரிக்கையின் மீதான உரையின் போது கூட அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்தக் கோரிக்கையை நான் முன்வைத்தேன். இன்னும் சொல்லப்போனால், என்னுடைய வீட்டில் நான் பயன்படுத்துகின்ற பொருட்கள் பெரும்பான்மையானவை, நீங்கள் தயாரித்த பொருட்கள்தான் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் மட்டுமல்ல, என்னுடைய வீட்டில் மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வீட்டிலும் நிறையப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அது நீங்கள் தயாரித்த பொருட்கள்தான். பிறருக்கு பரிசு கொடுக்கும்போதும் உங்களுடைய தயாரிப்புகளைத்தான் நான் பரிசாக வழங்குகின்றேன்.

நம்முடைய அரசு மகளிர், சுய உதவிக் குழுக்களுக்கு ஆண்டுதோறும் இலக்கைத் தாண்டி கடன் இணைப்புகளை வழங்கி வருகின்றது.

**இலக்கைத்தாண்டி கடன் வழங்கல்!**

கடந்த 2022 - 2023ஆம் நிதியாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 25,000 கோடி கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இலக்கைவிட் அதிகமாக 25,642 கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்கி, நாம் சாதனை படைத்துள்ளோம். சென்ற வருடம் ரூபாய் 25,000 கோடி, இந்த வருடம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்க இலக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதில், கடந்த ஜுலை மாதம் 2023 வரையில் 11,468 கோடி ரூபாய் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இலக்கினை, வரும் டிசம்பர் மாதத்திற்குள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இந்த வருடமும் அந்த இலக்கை அடைந்து சாதனை படைப்போம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்தக் கடன் இணைப்பைப் பெறும் மகளிர் சுய உதவிக்குழுவினர் ஏராளமான சாதனைகளைப் படைத்து வருகின்றனர்.

**‘சங்கீதம்’ சுய உதவிக்குழுவுக்கு வாழ்த்து!**

நம்முடைய துறையின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உங்களில் பலர், இன்றைக்குத் தொழில்முனைவோராகவே உயர்ந்துள்ளீர்கள். அப்படிப்பட்ட சில வெற்றியாளர்களை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

`நாப்கின்’ தயாரிப்புத் தொழிலில் பெரும் தனியார் நிறுவனங்கள்தான் அதிக அளவில் ஈடுபட்டிருந்தனர். இதனை மாற்றுகின்ற விதமாக நம்முடைய சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த சகோதரிகளும் `நாப்கின்’ தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில், சென்னை பழைய வண்ணாரப் பேட்டை சஞ்சீவிராயன் பேட்டையில் செயல்படும் சங்கீதம் சுய உதவிக் குழு சகோதரிகள் நாப்கின்களைத் தயாரித்து, நம்முடைய துறையின் மூலம், அரசு அலுவலகங்கள், அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் விற்பனை செய்து வருகின்றனர். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னை சேப்பாக்கத்தில் செயல்படும், `சிங்கப்பெண்கள்’ பகுதி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கான `முத்துக்குமரன் சுய உதவிக்குழு’, `சக்தி மகளிர் சுயஉதவிக்குழு’ ஆகியவற்றின் உறுப்பினர்கள் வந்துள்ளனர். சணல்பைகள், துணிகளி லான வேலைபாடுகள் மற்றும் சுவையான தின்பண்டங்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் உங்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

ராயபுரம், காசிமேடு பி பிளாக் பகுதியைச் சார்ந்த `அத்திப்பூக்கள்’ சுய உதவிக் குழுவின் சகோதரிகள் ஒவ்வொருவரும் இன்றைக்கு டைலரிங் யூனிட் நடத்தி, சராசரியாக நபர் ஒருவருக்கு மாதத்துக்கு பத்தாயிரம் ரூபாய் வரை ஈட்டி வருகின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

இந்த நிகழ்ச்சியில் திருநங்கையர், திருநம்பிகளைக் கொண்ட குழுக்களுக்கு ரூபாய் 4 இலட்சம் கடன் இணைப்பு வழங்கியுள்ளோம். சூளைமேடு நமச்சிவாயபுரத்தில் செயல்பட்டுவரும், `தோழி’ சிறப்புச் சுய உதவிக்குழு சகோதரிகள் இந்த நிதியைச் சரியாகப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற அன்புடன் நான் கேட்டுக்கொள்கின்றேன். வேலை வாய்ப்புக்கான ஆணைமற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்றுள்ள அத்துனைபேருக்கும் மீண்டும் எங்களின் துறையின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் பொருட்களை நகரங்களில் விற்பனை செய்வதற்காக 25 `பூமாலை’ வணிக வளாகங்களை ரூபாய் 5 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைத்துள்ளோம். அதனை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அண்மையில் திறந்து வைத்தார்கள். இதனால், நீங்கள் மிகப்பெரிய அளவில் பயனடைந்து வருகிறீர்கள்.

**உங்கள் உழைப்பின் மீது நம்பிக்கை!**

இங்கு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெறும் கடன்தொகையாகப் பார்க்கவில்லை. உங்கள் உழைப்பின் மீது நம்முடைய `திராவிட மாடல் அரசு’ வைத்துள்ள நம்பிக்கையாகத்தான் பார்த்து வருகிறார், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

முதலமைச்சர் அவர்கள் என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்பார்கள். நம்முடைய திராவிட மாடல் அரசு உங்களுடைய முன்னேற்றத்திற்காக அயராது பாடுபடும். நீங்களும் அரசுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கமலநாதன்

**ஆகஸ்ட் 17 (1997)**



தருமபுரி மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

நெருக்கடி நிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

“ஓர் இனிய நண்பனை மட்டுமல்ல; இலட்சிய வீரனையும் இழந்தேன்” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

இராமநாதபுரம் மாவட்டத்தில் சாலை விபத்தில்

## உயிரிழந்த குடும்பத்தினருக்கு நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.17–

இராமநாதபுரம் மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:–

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம் மற்றும் உள் வட்டம், மாயாகுளம் பகுதியில் 14–8–2023 அன்று மதியம் அரசு பேருந்தும், தனியார் வாகனமும் எதிர்பாராதவிதமாக மோதியதில் கட்டுப் பாட்டை இழந்த அரசு பேருந்து நிலை தடுமாறிச் சென்ற போது ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்தில் இருந்த இரண்டு பெண்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா 2 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

முரசொலி முன்னாள் முகவர்

## மறைந்த ஆதிமூலம் புதல்வர் முத்து மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 17–

சென்னை, இராயப்பேட்டை பகுதியில், முரசொலியின் முன்னாள் முகவர் மறைந்த ஆதிமூலம் அவர்களின் புதல்வர் முத்து (வயது 55) சாலை விபத்தில் சிக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி முத்து அவர்கள் நேற்று முன்தினம் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். நேற்று (16.8.2023) காலை அன்னாரது இறுதிச் சடங்குகள் நடைபெற்றது.


அன்னாரது மறைவுச் செய்தியறிந்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த முத்துவின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தம்பி ஏ. தேவேந்திரன்

**ஆகஸ்ட் 17 (1995)**



திராவிட இயக்க கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தி.மு.கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 38 ஆண்டுகளாக நகர்மன்ற உறுப்பினராகவும், மயிலாடுதுறை நகர்மன்றத் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கல்லக்குடி, கருப்புக் கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று 17 முறை சிறை சென்றவர்.

“மதுரைக்கு முத்து, மாயூரத்திற்கு தம்பி தேவேந்திரன்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# சுதந்திர தின விழா: முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று, விருதுகள் வழங்கி சிறப்பித்தார் முதல்வர்!



சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் தேசியக் கொடியேற்று விழாவிற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, முப்படைகளின் உயர் அதிகாரிகள், தமிழ்நாடு காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா அறிமுகப்படுத்தி வைத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் விருதுக்கான தங்கப் பதக்கம், காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழை வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கணினித் துறை பேராசிரியர் முனைவர் டபிள்யூ.பி. வசந்தா கந்தசாமிக்கு வழங்கி, சிறப்பித்தார். உடன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதினை செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி நா.முத்தமிழ்செல்விக்கு வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த நிறுவனத்திற்கான தமிழ்நாடு அரசு விருதினை கன்னியாகுமரி, சாந்தி நிலையத்திற்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் கண்காணிப்பு செல்லிட செயலியை உருவாக்கிய தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை வழங்கிடும் வகையில் இணை இயக்குநர் (மின் ஆளுமை) திருமதி பெ.ரமண சரஸ்வதிக்கு வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.





நேற்று முன்தினம் (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன், டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருதுகள், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்தோருக்கான விருதுகள், மகளிர் நலத்திற்கான சிறந்த சேவைக்காக தொண்டாற்றியவர்களுக்கான விருது, சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள், காவல் பதக்கங்கள் ஆகிய தமிழ்நாடு அரசின் விருதுகளையும், பதக்கங்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் நெல்லை திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலம்.**

# இடம் பொருள் கலைஞர் 31





# நெல்லை திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலம்

## ஆசிய அளவில் உயர்ந்த தமிழர் சாதனை

சென்னையின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்த அண்ணா மேம்பாலம், தனது 50 ஆண்டுகளை நிறைவு செய்த கொண்டாட்டம் சமீபத்தில் தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்தது.

அதே காலகட்டத்தில் கட்டப்பட்ட மற்றொரு பாலம் தனது 50-வது ஆண்டு கொண்டாட்டத்துக்குத் தயாராகி வருகிறது. ஐம்பது ஆண்டுகளைத் தொட உள்ள ஒரு பாலத்தின் கதை இது. கட்டியவர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர்.

### யாருக்கும் இல்லாத அக்கறை

“உனக்கு ஏன் இவ்வளவு அக்கறை? உலகத்தில் யாருக்கும் இல்லாத அக்கறை?”எனப் ‘பராசக்தி’யில் வசனம் எழுதினார் கலைஞர். அந்தக் கேள்வி அவருக்கு அவரே கேட்டுக்கொண்ட கேள்வி என்றுதான் கலைஞரின் வரலாற்றை எழுதுபவர்கள் கண்டுபிடித்தது.

தமிழ்நாட்டின் கட்டமைப்புகளில் அவர் காட்டிய அக்கறையில் ஒன்றுதான் திருநெல்வேலியில் எழுந்து நிற்கும் **திருவள்ளுவர் இரட்டை அடுக்கு மேம்பாலம்** என்கிற அடையாளம்.

முத்தமிழறிஞர் கலைஞரின் கையில் ஆட்சியை ஒப்படைத்து விட்டுச் சென்றார் பேரறிஞர் அண்ணா. அதைத் திறம்பட நடத்திக் காட்டுவதே அவரிடம் கற்ற அரசியல் பாடத்தின் ஆரம்பப் பாடம் என நிரூபித்தார் கலைஞர்.

அந்தப் பாடம்தான் தமிழ்நாட்டின் சரித்திரத்தை மாற்றி எழுதியது. அவர் உருவாக்கியவை எல்லாமே எதிர்காலத் தேவைகளை முன்னரே கணித்து, நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்பவையாக உள்ளன.

**1973-ஆம் ஆண்டு, கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பாலத்தை அந்த ஆண்டு நவம்பர் 13-ஆம் தேதி பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார் கலைஞர்.**

### நெல்லையின் நெருக்கடி

சென்னையின் போக்குவரத்து நெரிசலுக்காக அண்ணா மேம்பாலத்தை உருவாக்கி, மாநகர மக்களின் வயிற்றில் பால் வார்த்தவர் கலைஞர். ஆச்சரியம் என்னவெனில், அதே காலகட்டத்தில் திருநெல்வேலி மக்களின் தேவைகளையும் அறிந்ததுதான். தமிழ்நாட்டின் தேவைகளைக் குறுக்கு வெட்டாக அவர் அறிந்து வைத்திருந்ததன் 50 ஆண்டுகளுக்கு முன்னரான சாட்சி, அந்த அடுக்கு மேம்பாலம்.

நெல்லைச் சந்திப்பு ரயில் நிலையத்துக்கும், நெல்லைப் பேருந்து நிலையத்துக்கும் இடையே அமைந்துள்ளது இந்தத் திருவள்ளுவர் இரட்டை அடுக்கு மேம்பாலம்.

நெல்லைச் சந்திப்பு என்பதால், ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படும் நிலை. முக்கியமாக, நெல்லை ரயில் நிலையத்தில் இருந்து, தென்புறமாகச் செல்ல வேண்டிய வாகனங்கள், சரக்குகளை ஏற்றி வரும் வாகனங்கள் எல்லாம் இந்தச் சாலை சந்திப்பைத் தொட்டாக வேண்டும். ரயில்வே கேட் மூடப்படும் நேரத்தில் இந்தச் சந்திப்பில் அணிவகுத்து நிற்கும் வாகனங்களால் அந்தக் காலத்திலேயே நெல்லை பெரிய அவஸ்தையைக் கண்டிருக்கிறது. இதுதொடர்பான கோரிக்கை கலைஞரிடம் வைக்கப்பட்டதுமே, நெல்லையர்களின் குரலுக்குக் கவனம் கொடுக்கிறார் கலைஞர்.

ஒருவேளை அந்தச் சந்திப்பில், அரசியல் கைதியாக கலைஞர் கைது செய்யப்பட்டு ஏற்றப்பட்ட வாகனம், பாளையங்கோட்டைச் சிறைக்குச் செல்வதற்காக நெடுநேரம் நின்று இருக்கலாம். அதனால், மக்களின் சிக்கல் சொல்லாமலேயே அவருக்குப் புரிந்திருக்கும்.

### ஆசியாவிலேயே முதல் ஈரடுக்குப் பாலம்

மக்களுக்கான தேவையும், அந்தத் தேவை குறித்து அரசாங்கத்துக்குத் தெளிவான புரிதலும், ஆட்சியில் இருப்பவர்களின் ஆர்வமும்தான் ஒரு திட்டத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன.

திருநெல்வேலி மக்களுக்கு நெல்லையப்பர் கோயிலும், சுவை மிகுந்த இனிப்புகளும் நெருக்கமாக இருக்கலாம். அதே நேரத்தில் இன்னும் பத்திருபது ஆண்டுகள் கழித்துக் கேட்டாலும், தங்களின் பெருமையாக இந்த அடுக்குப் பாலத்தைச் சொல்வார்கள்.

ஆமாம், ஆசியாவிலேயே ரயில் பாதையின் குறுக்காகக் கட்டப்பட்ட முதல் இரட்டை அடுக்கு மேம்பாலம் என்கிற புகழைப் பெற்றது அந்தப் பாலம். இந்தியாவிலேயே முதல் இரு அடுக்கு மேம்பாலமும் அதுதான்.

### தலைமுறை தாண்டிய பாலம்

1969-ஆம் ஆண்டில் அந்தப் பாலத்துக்கு அடிக்கல் நாட்டினார் கலைஞர். 706 மீட்டர் நீளமும், 8 மீட்டர் அகலமும் கொண்ட இந்தப் பாலத்தை 26 தூண்கள் தாங்குவது போல வடிவமைக்கப்பட்டது.

இவற்றில் 13 தூண்கள், வில் வளைவாக அமைக்கப்பட்டன. முக்கியமாக, இந்தியாவிலேயே அதுவரை இல்லாத வகையில் இரண்டு அடுக்கு மேம்பாலமாக உருவாக்கப்பட்டது. பாலத்தின் கீழ்த் தளத்தில், இரு சக்கர வாகனங்கள், ஆட்டோ என இலகுரக வாகனங்கள் செல்வது போலவும், பாலத்தின் மேலே பேருந்து, லாரி என கனரக வாகனங்கள் செல்வது போலவும் அமைக்கப்பட்டது. அப்போது அந்தத் திட்டத்தின் மதிப்பீடு 47 லட்சம்.

அந்தப் பாலத்தின் பராமரிப்புப் பணிகள் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் 2000 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அப்போது அதற்குச் செலவான தொகை, பாலத்தைக் கட்டியதை விட மூன்று மடங்கு. அதைச் செயல்படுத்தியதும் கலைஞர்தான்.

1973-ஆம் ஆண்டு, கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பாலத்தை அந்த ஆண்டு நவம்பர் 13-ஆம் தேதி பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார் கலைஞர். அரசு வாகனங்கள் முன்செல்ல அதன் பின்னர் மக்களின் வாகனங்கள் அணிவகுத்துப் பாலத்தில் ஏறி இறங்கின.

நெல்லை மக்களுக்கு அதுநாள்வரை இருந்த போக்குவரத்து நெருக்கடியை ஒரே நாளில் மாற்றிக் காட்டினார் கலைஞர். அப்போதைய தலைமுறைக்கு மட்டுமல்ல, இந்தத் தலைமுறைக்கும் அந்தப் பாலம் பயன்பாட்டில் இருக்கிறது எனில், மக்கள் நலனில் அவர் கொண்ட அக்கறைதான் முதல் காரணம்.

### ஈரடிக் குறள் போல பாலம்

பாலத்தின் திறப்பு விழாவின் போது, திருக்குறளைப் போல இரண்டு அடிகளைக் கொண்டுள்ளதால், இந்தப் பாலத்துக்கு ‘திருவள்ளுவர் இரட்டை அடுக்குப் பாலம்’ எனப் பெயர் சூட்டப்படுகிறது என்றார் கலைஞர். நாளடைவில், அது இரட்டைப் பாலம் என மக்களின் புழக்கத்துக்கு வந்தது.

இன்றைக்குக் கட்டுமானத் துறையில் பல தொழில்நுட்பங்கள் வந்துவிட்டன. பாலங்கள் கட்டும் போது, ரயில் போக்குவரத்துக்கும் சாலை போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல், பாலத்தை உயர்த்தி விட முடியும். ஆனால், தொழில்நுட்பம் அவ்வளவு வளராத காலத்திலேயே ரயில் போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல், இரட்டை அடுக்குப் பாலமாகக் கட்டுவது அசாத்திய திட்டமிடல். வெறும் பாலம்தானே கட்டிவிடலாம் என நினைக்கவில்லை. அது எத்தனை ஆண்டுகள் ஆனாலும் பயன் தர வேண்டும், பெயர் சொல்ல வேண்டும், அதற்குரிய பெருமை சேர வேண்டும் என உருவாக்கப்பட்ட பாலம் அது . அசாத்தியங்களைச் சாத்தியங்கள் ஆக்கும் கலைஞரின் ஆளுமைக்கு, நெல்லையின் நிலைத்து நிற்கும் சான்று இந்த இரட்டை அடுக்கு மேம்பாலம்.

### பகுதி சார்ந்த தேவைகள்

தமிழ்நாடு முழுமைக்கும் அனைத்து மக்களுக்குமான சட்டங்கள், திட்டங்கள் மட்டுமல்ல. ஒவ்வொரு ஊருக்கும் என்ன தேவை என்பது அறிந்து அந்தத் தேவைகளுக்கும் கவனம் கொடுத்தது கலைஞர் ஆட்சி. இந்த 50 ஆண்டுகளில் திருவள்ளுவர் இரட்டை அடுக்கு மேம்பாலம் நெல்லை மக்களின் வாழ்க்கையோடு இரண்டற கலந்துள்ளது.

தமிழ்நாட்டு வாழ்வியலில் இரண்டறக் கலந்த கலைஞரின் பெருமைகளைப் பேசும் ஓராயிரம் திட்டங்களில், ஓராயிரம் கட்டுமானங்களில் நெல்லை மக்களின் நெஞ்சத்தில் கலந்த ‘ரெட்ட பாலமும்’ நீடித்து நிற்கும். ...வலம் வருவோம்

## தூபம் போடும் அரசியல்!

கடந்த மூன்று மாதங்களாகப் பற்றி எரிந்து வரும் மணிப்பூர் விவகாரத்தில், அம்மாநில முதலமைச்சர் பைரன் சிங், சுதந்திர தின விழாவில் முதன்முறையாக வாய் திறந்து உள்ளார். ஆனால், நீடித்து வரும் பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காணும் முயற்சி, அவரது உரையில் இல்லை. பாதிக்கப்படும் மக்களையே குற்றவாளியாகச் சித்தரிக்கிறது அவரது உரை.

வெளிநாட்டு உதவியுடன் கலவரத்தை நடத்துகின்றனர் எனப் பேசுவது பிரச்சினையின் தீவிரத்தைத் திசை திருப்பும்விதமாகவே இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு, வன்முறையாளர்கள் மீது உறுதியான நடவடிக்கை ஆகியவை குறித்த எதுவும் அவரது உரையில் இல்லை. வெளியில் இருந்து வரும் சக்திகள்தான் வன்முறைக்குக் காரணம் எனத் தூபம் போட்டுக் கொண்டே, ‘மறப்போம் மன்னிப்போம்’ என மக்களிடம் கோரிக்கை விடுக்கிறார். மறப்பதும் மன்னிப்பதும் மக்களின் இயல்பான குணம்.

ஆனால், பா.ஜ.க.வின் போலியான அக்கறை மக்களை மறக்க விடாது தூபம் போட்டுக் கொண்டே இருக்கிறது. இந்தப் போலிகளைத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டிப் பேசுவதன் மூலம் மக்களின் அமைதிக்கு வழி பிறக்கும். மணிப்பூர் மக்களுக்கு இந்தியா துணை நிற்கும் என்பது வெறும் சொற்களல்ல, செயல் என்பதை காலம் நிரூபிக்கும்.

## :ப்ளாஷ்பேக்





அன்பழகன்

### இனிப்பான இணையேற்பு!

1981 ஜனவரி 18 அன்று, அன்றைய மணப்பாறை நகரத் தி.மு.கழகச் செயலாளர், மறைந்த ம.கோபாலகிருஷ்னண் அவர்களது மகனான எனக்கும் -பள்ளப்பட்டி அ.கல்யாணி அவர்களுக்கும் இணையேற்பு விழா, தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. தமிழர் திருநாளான பொங்கல் சமயத்தில் திருமணம் நடைபெற்றதால், கலைஞரின் உரை அதை ஒட்டி அமைந்தது. கரும்பின் சுவையை உவமை காட்டி மணமக்களான எங்களை வாழ்த்தினார். அன்றைய நிகழ்வு, என்றும் என் மனதில் பசுமையாக நினைவில் நிற்கிறது. கொள்கை மாறாமல் இன்றும் என் கழகப் பணி தொடர்கிறது.

**-கோ.அன்பழகன், நகரத் தி.மு.க. முன்னாள் அவை தலைவர், மணப்பாறை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம்!

**1996-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இடஒதுக்கீட்டை அமல்படுத்தி முன்னோடியாக விளங்கினார் கலைஞர். அவரது அரசாங்கம் பெண் ஆளுமைகளுக்குப் பயிற்சி மற்றும் உதவிகளையும் வழங்கியது. இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கை மற்ற மாநிலங்களுக்கு உத்வேகம் அளித்து, பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 212




-வாழ்வோம்

எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131